Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, MARCH 21, 2025

வெள்ளிக்கிழமை 21, மார்ச் 2025 | ஒளி: 10 கதிர்: 184 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE



## “குண்டு விழவில்லை; துண்டு விழுந்தது”

யுத்தம் முடிவடைந்து 16 வருடங்கள் கடந்துள்ள இந்த நாட்டில் இப்போது குண்டு விழாத போதும், வரவு- செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை அதிகரித்துச் செல்கிறது என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (20) நடைபெற்ற வரவு- செலவுத் திட்டத்தில் குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார்.

நாட்டில் அழிவுகளை ஏற்படுத்திய விடயமாக யுத்தம் உள்ளது. இதற்காக ஆயுதங்களைக் கொள்வனவு செய்த போதும், படையினரை பராமரிக்கவும் ஒதுக்கப்படும் நிதி உச்சமாக இருந்தது. இந்நிலையில் யுத்தம் முடிந்து விட்டால் பாதுகாப்புக்காக ஒதுக்கப்படும் நிதியின் அளவு குறையும் என்றும், அந்த நிதியின் ஊடாக ஆக்கத்திறன் அபிவிருத்திகளுக்கு அதிகளவான நிதியை ஒதுக்க முடியும் என்று கூறினார். ஆனால் யுத்தம் முடிவடைந்துள்ள போதும் கடந்த முறையை விடவும் இம்முறை துண்டுவிழும் தொகை 160 பில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது.

தொடர்ச்சி P2



336 உள்ளூராட்சி மன்றங்களுக்கும்

# மே.6 வாக்களிப்பு

336 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்களை ஏற்கும் நடவடிக்கை 2025 மார்ச் 17 ஆரம்பிக்கப்பட்டது. அந்த நடவடிக்கைகள் யாவும், 2025 மார்ச் 20 நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்த நிலையில், மே.6ஆம் திகதியன்று வாக்களிப்பு நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கல்முனை மாநகர சபை, தெஹியத்த கண்டிய பிரதேச சபை , மன்னார் பிரதேச சபை, பூநகரி பிரதேச சபை மற்றும் எல்பிட்டிய பிரதேச சபை ஆகியவற்றுக்கு தேர்தல் நடைபெறாது. அவற்றைத் தவிர 336 உள்ளூராட்சி மன்றங்களுக்கு மட்டுமே தேர்தல் நடைபெறவுள்ளது. அதில், 28 மாநகர சபைகள், 36 நகர சபைகள் மற்றும் 272 பிரதேச சபைகளுக்குள் அடங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

கெஹலியவின் கோரிக்கையை

## நிராகரித்த நீதிமன்றம்



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் பாராளுமன்றக் கிளையில் உள்ள வங்கிக் கணக்கை முடக்கிய உத்தரவை நீக்குமாறு அவர் சார்பாக முன்வைக்கப்பட்ட கோரிக்கையைக் கொழும்பு மேல் நீதிமன்றம் நிராகரித்தது.

இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட விசாரணைக்குப் பின்னர் இந்தக் கணக்கு முடக்கப்பட்டது.

தொடர்ச்சியான விசாரணையின் ஒரு பகுதியாக, முன்னாள் சுகாதார அமைச்சரின் குடும்ப உறுப்பினர்களுக்கு சொந்தமான 16 நிலையான வைப்பு கணக்குகள் மற்றும் மூன்று காப்பீட்டுக் கொள்கைகளை முடக்குவதற்கான உத்தரவை கொழும்பு மேல் நீதிமன்றம் சமீபத்தில் மேலும் மூன்று மாதங்களுக்கு நீட்டித்தது.

தொடர்ச்சி P2

## கன்னி பட்ஜெட்டின் இறுதி வாக்கெடுப்பு

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2025ஆம் ஆண்டுக்கான கன்னி வரவு- செலவுத் திட்டத்தின் (பட்ஜெட்டின்) மீதான மூன்றாவது வாசிப்புக்கான வாக்கெடுப்பு வெள்ளிக்கிழமை (20) மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கன்னி பட்ஜெட், நிதியமைச்சரும் ஜனாதிபதியுமான அனுரகுமார தி ஸ்ரீசாநாயக்க, பெப்ரவரி 17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் பெப்ரவரி 18 முதல் 25 வரை 7 நாட்கள் இடம்பெற்று வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. பட்ஜெட்டுக்கு ஆதரவாக 155 வாக்குகளும் எதிராக 46 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் 109 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது. அதன்பின்னர், 19 நாட்களாக குழுநிலை விவாதம் நடைபெற்று வெள்ளிக்கிழமை(21) இறுதி வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

## “சிரேஷ்ட பிரஜைகள் அநாதரவாகி விட்டனர்”

சிரேஷ்ட பிரஜைகளின் ஒரே வருமானமாக இருந்த சிரேஷ்ட பிரஜைகள் கணக்கு மீதான வட்டி குறைக்கப்பட்டதால், அவர்கள் மேலும் அநாதரவான நிலைக்கு ஆளாகியுள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இதனால், மருத்துவ வசதிகள், சத்தான உணவுகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் பலர் பல நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர். எனவே அவர்களுடைய அடிப்படையான பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்குவது தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.



பாராளுமன்றத்தில் வியாழகிழைமை (20) சிரேஷ்ட பிரஜைகளின் கணக்குகள் தொடர்பாக விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பப்பாரோ வந்தடைந்தார்

அமெரிக்க இந்தோ - பசிபிக் கட்டளைப் பீடத்தின் (INDOPACOM) கட்டளைத் தளபதி அட்மிரல் சாமுவேல் பப்பாரோ புதன்கிழமை (19) அன்று இலங்கைை வந்தடைந்துள்ளார்.


இவர் எதிர்வரும் 21ஆம் திகதி வரை நாட்டில் தங்கி இருப்பார்.

விஜயத்தின் போது, நீண்டகாலமாக நீடிக்கும்அமெரிக்க-இலங்கை பாதுகாப்புப்பங்காண்மையினை மீண்டும் உறுதிப்படுத்துவதற்காகவும், இந்தோ-பசிபிக் பகுதியில் பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பு தொடர்பான அமெரிக்காவின் தொலைநோக்குப் பார்வையினைப் பகிர்ந்து கொள்வதற்காகவும் இலங்கையின் சிரேஷ்ட அரச அதிகாரிகளுடனும்,இராணுவத் தலைவர்களுடனும்அட்மிரல் பப்பாரோ பல சந்திப்புகளை மேற்கொள்வார்.




கட்டளைத்தளபதி பப்பாரோவின் விஜயமானது, இலங்கையுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும், மற்றும்இந்தோ-பசிபிக் பகுதியில் காணப்படும் பொதுவான சவால்களை எதிர்கொள்வதற்குமானஅமெரிக்காவின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

## பால் தேநீர் எகிறும்



இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால் மா பாக்கெட்டின் விலை அதிகரிப்பால், ஏப்ரல் 1 முதல் ஒரு கப் பால் தேநீர் விலை ரூ.10 உயரும் என்று அகில இலங்கை சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் (AICROA) தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பால் மா விலை 4.7 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக AICROA தலைவர் ஹர்ஷனா ருக்ஷன் தெரிவித்தார்.

இதன் விளைவாக, ஏப்ரல் 1ஆம் திகதிக்குள் 400 கிராம் பால் மா பாக்கெட்டின் சில்லறை விலை அண்ணளவாக 50 ரூபாவால் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தென்னகோனின் விளக்கமறியல் நீடிப்பு



கட்டாய விடுமுறையில் இருக்கும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் விளக்கமறியல் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தால், வியாழக்கிழமை (20) நீடிக்கப்பட்டுள்ளது. அவரை ஏப்ரல் 03ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## அதானி குழுமம் தெளிவுப்படுத்தல்

இலங்கையில் அதன் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஒப்பந்தத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகப் பரவும் வதந்திகளை அதானி கிரீன் எனர்ஜி SL Ltd. திட்டவட்டமாக மறுக்க விரும்புகிறது. ஒரு கிலோவாட்-மணித்தியாலத்திற்கு 7 சதமாக விலையை மாற்றியமைக்க நாங்கள் முன்வந்துள்ளதாகக் கூறும் கூற்றுக்கள் முற்றிலும் தவறானவை மற்றும் அடிப்படையற்றவை என்று அக்குழுமம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## “ரணிலின் கையெழுத்தில் மஹிந்த, அனுர பயணம்”

**மோசடி இடம்பெற்றது தடயவியல் அறிக்கைகளிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது**



பொருளாதார கொள்கை விடயத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடிதங்களில் வைத்த கையெழுத்தை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அநுரகுமார அரசாங்கமும் பின்பற்றுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## வவுச்சர் காலம் நீடிப்பு

2025ஆம் ஆண்டிற்கான பாடசாலை காலணிகளுக்கான வவுச்சர்களின் செல்லுபடியாகும் காலம் ஏப்ரல் 10ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாகக் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள், மாணவ துறவிகள் மற்றும் பிரிவென்கள் மற்றும் சீல மடங்களின் சாதாரண மாணவர்களுக்கு ஒரு ஜோடி காலணிகளை வாங்குவதற்காக ரூ.3,000 மதிப்புள்ள பரிசு வவுச்சரை வழங்க அரசாங்கம் அனுமதித்திருந்தர்



PAGE 1 தொடர்ச்சிகள்

# “குண்டு விழவில்லை; துண்டு விழுந்தது”

இதேவேளை, இந்தியா, பிரிட்டனில் படைகளின் எண்ணிக்கையுடன் அந்நாட்டு மக்களின் எண்ணிக்கையை ஒப்பிட்டால் எமது நாட்டில் காணப்படும் படையின் அளவு அதிகமாக உள்ளது. இங்கே முல்லைத்தீவில் இரண்டு மனிதர்களுக்கு ஒரு படையினர் என்ற ரீதியிலும், யாழ்ப்பாணத்தில் 14 மனிதர்களுக்கு ஒரு படையினர் என்ற விகிதத்தில் படை குவிக்கப்பட்டுள்ளது என்றார்.

# “ரணிலின் கையெழுத்தில் மஹிந்த, அனுர பயணம்”

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (20) இடம்பெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டக் குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

ரணிலின் பொருளாதார கொள்கையை முழுமையாக மறுசீரமைப்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று நாணய நிதியம் விதித்த பரிந்துரைகள் அனைத்தையும் முழுமையாக ஏற்றுக் கொண்டு அதற்கமைய செயற்படுகிறார்கள்.

மத்திய வங்கியின் பிணைமுறி கொடுக்கல் வாங்கலில் மோசடி இடம்பெற்றது என்பது பல ஆணைக்குழுக்களின் அறிக்கைகளிலும், தடயவியல் அறிக்கைகளிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த மோசடி தொடர்பான அறிக்கையின் அடிக்குறிப்பில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆகவே இதனை அரசியலுக்குப் பயன்படுத்திக் கொள்ளாமல், முறையான விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்க வேண்டும்..

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று பணிப்பாளருக்கு அரசாங்கம் கடந்த மாதம் 11 ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பி, விதிக்கப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்கிறோம். நிபந்தனைகளின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கடிதத்தில் நிதி பதில் அமைச்சராக அனில் ஜயந்த கையொப்பமிட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு முறை நாணய நிதியத்துக்கு கடிதம் அனுப்பி வைத்த போது நாட்டில் இருக்கவில்லை. அவருக்கு பதிலாக முன்னாள் அமைச்சர் சரத் அமுனுகம குறித்த கடிதத்தில் கைச்சாத்திட்டார். பின்னர் மஹிந்த ராஜபக்ஷ அந்த கடிதத்தில் தான் கைச்சாத்திடவில்லை என்று மக்களிடம் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவும் தற்போது இவ்வாறே செயற்படுகிறார்.

நாணய நிதியத்துக்கு கடிதம் அனுப்பும் தினத்தன்று அவர் நாட்டில் இருக்கவில்லை. துபாய் சென்று விட்டார்.இவரும் தான் கடிதத்தில் கைச்சாத்திடவில்லை என்று எதிர் காலத்தில் மக்களிடம் கூறுவார்.

# தென்னகோனின் விளக்கமறியல் நீடிப்பு

மாத்தறை வெலிகம பெலனே பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் மீது 2023 டிசம்பர் 13 ஆம் திகதி நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

எனினும், தேசபந்து தென்னக்கோன் நீதிமன்ற உத்தரவின் பின் கடந்த 20 நாட்கள் தலைமறைவாக இருந்தார். எனினும், மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் புதன்கிழமை (19) காலை சரணடைந்தார். அதனையடுத்து அவர், வியாழக்கிழமை (20) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

அவரை மாத்தறை நீதவான் நீதிமன்றில் வியாழக்கிழமை (20) ஆஜர்படுத்தப்பட்டபோது, அவருக்கான விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

# அதானி குழுமம் தெளிவுப்படுத்தல்

## ஆரம்ப விதிமுறைகளுக்கு நாங்கள் முழுமையாக உறுதிபூண்டுள்ளோம்

சம்பந்தப்பட்ட இலங்கை அதிகாரிகளுடன் நிறுவப்பட்ட ஒப்பந்தத்தின் ஆரம்ப விதிமுறைகளுக்கு நாங்கள் முழுமையாக உறுதிபூண்டுள்ளோம். அதானி கிரீன் எனர்ஜி SL Ltdஇன் முதலீட்டுத் திட்டங்களும் திட்ட அளவுருக்களும் மாறவில்லை.

முன்மொழியப்பட்ட காற்றாலை திட்டத்திலிருந்து அதானி குழுமம் சுயமாக மற்றும் மரியாதையுடன் விலகியிருந்தாலும், இலங்கை அரசாங்கம் ஏதாவது சந்தர்ப்பத்தில் நிறுவனத்தின் பங்களிப்பை கருதும் பட்சத்தில், எந்தவொரு மேம்பாட்டு வாய்ப்பையும் மேற்கொள்ள அதானி குழுமம் எப்போதும் தயாராக இருக்கும் என மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

# “சிரேஷ்ட பிரஜைகள் அநாதரவாகி விட்டனர்”

அறவிடப்படுகின்ற தடுத்து வைத்தல் வரியை மீண்டும் சிரேஷ்ட பிரஜைகளுக்குப் பெற்றுக் கொள்ளும் முறைமை காணப்படுமாயின் அதை அறிந்துகொள்வது அவசியம் .இந்த முறைமையின் மூலம் கல்வியறிவு குறைவாக உள்ள சிரேஷ்ட பிரஜைகள் அனாதரவற்ற நிலைக்கு உட்படுவதால் இலகு முறையைப் பின்பற்ற வேண்டும். அத்துடன் சிறுவர் வைப்புக்களுக்கும் தடுத்து வைத்தல் வரி அறவிடப்படுவதாக இருந்தால் அந்த வரியை மீளப் பெற்றுக் கொள்ளும் முறை என்ன?, சிறுவர் வைப்பு தடுத்துவைத்தல் வரியிலிருந்து விலக்கு அளிக்க முடியுமா? என்றும் வினவினார்.

# நிராகரித்த நீதிமன்றம்

ரம்புக்வெலவின் ஓய்வூதியம், அரகலயவின் போது அவரது வீட்டிற்கு ஏற்பட்ட தீ விபத்தில் ஏற்பட்ட சேதங்களுக்கு ரூ.95.9 மில்லியனுக்கும் அதிகமான இழப்பீடு ஆகியவை வைப்பு செய்யப்பட்டுள்ள பாராளுமன்றக் கிளை வங்கிக் கணக்கையும் இந்த விதியின் கீழ் முடக்கியுள்ளதாக சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார். இந்த வங்கிக் கணக்கின் மீதான முடக்கத்தை நீக்குமாறு சட்டத்தரணி கோரினார்.

இருப்பினும், உண்மைகளைப் பரிசீலித்த பின்னர், கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே இந்தக் கோரிக்கையை நிராகரித்தார்.

# வாகன விபத்தில் ஐவர் படுகாயம்





தினியாவல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 07வது தூண், உபேக்ஷா பாலர் பாடசாலைக்கு அருகில் வியாழக்கிழமை (20) மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஐவர் படுகாயமடைந்து மீகஹதென்ன ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக தினியாவல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நெலுவ பகுதியிலிருந்து பெலவத்தை நோக்கி, தேயிலை ஏற்றிப் பயணித்துக்கொண்டிருந்த லொறியொன்றும், பெலவத்தையிலிருந்து களுபோவிட்டியான நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டியொன்றுமே இவ்வாறு மோதி விபத்தில் சிக்கியுள்ளன.

முச்சக்கர வண்டியில் பயணித்தவர்களின் அடையாளங்கள் இதுவரை உறுதிப்படுத்தப்படாத நிலையில் தினியாவல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பலூன் தொண்டையில் சிக்கி சிறுவன் மரணம்

காலி - நெலுவ பகுதியில் பலூன் துண்டு ஒன்று தொண்டையில் சிக்கியதால் 11 வயதுடைய சிறுவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பெற்றோர் வீட்டில் இருந்தபோது, குறித்த சிறுவன் பலூனை வைத்து விளையாடி கொண்டிருந்ததாகவும், இதன் போது பலூன் வெடித்து அதில் ஒரு துண்டு சிறுவனின் தொண்டையில் சிக்கியுள்ளதாக கூறப்படுகிறது.

இதன் காரணமாக குறித்த சிறுவன் நெலுவ - மெதகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மிருசுவில் படுகொலை: குற்றவாளிக்கு பயணத்தடை

யாழ்ப்பாணம்- மிருசுவில் பகுதியில் எட்டு தமிழர்களைப் படுகொலை செய்த குற்றச்சாட்டின் கீழ் மரணதண்டனை விதிக்கப்பட்டு பின்னர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட குற்றவாளி சுனில் ரத்நாயக்கவிற்கு உயர்நீதிமன்றம் வெளிநாட்டு பயணத்தடையை வியாழக்கிழமை (20) விதித்துள்ளது.

குற்றவாளியான சுனில் ரத்நாயக்கவிற்கு மார்ச் 2020 இல் ஜனாதிபதியாகப் பதவி வகித்த கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பு வழங்கியமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை பூர்த்தியாகியுள்ள நிலையிலேயே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய பொது மன்னிப்பிற்கு எதிராக மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

மிருசுவிலில் இருந்து இடம்பெயர்ந்த 9 பேர், 2000ஆம் ஆண்டு டிசம்பர் 19ஆம் திகதி தங்கள் வீடுகளைப் பார்ப்பதற்காக மீண்டும் மிருசுவில் பகுதிக்குச் சென்றனர். இவர்களில் பதின்ம வயதினரும், ஐந்து வயது சிறுவனும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அவர்கள் தங்கள் பகுதிக்கு திரும்பி வந்தவேளை இரண்டு இராணுவத்தினர் அவர்களின் கண்களைக் கட்டி மோசமாகத் தாக்கியுள்ளனர்.

ஒரு இளைஞன் அவர்களின் பிடியிலிருந்து தப்பினான்.எனினும் ஏனைய 8 பேரும் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் உடல்கள் அருகில் உள்ள பகுதியில் புதைக்கப்பட்டிருந்த பகுதியில் மீட்கப்பட்டன.

# “மூத்தவர்களிடம் ஈறு நோய் அதிகரித்துள்ளது”

இலங்கையின் மூத்த குடிமக்களிடையே ஈறு நோய் அதிகரித்து வருவதாக பல் அறுவை சிகிச்சை நிபுணர் ஆலோசகர் நிலந்த ரத்நாயக்க கூறுகிறார் .

ஊடகங்களுக்கு உரையாற்றிய வைத்தியர் நிலந்த ரத்நாயக்க, 50% க்கும் மேற்பட்ட மூத்த குடிமக்கள் ஈறு நோயால் பாதிக்கப்படுவதாகக் கூறினார்.

பொதுமக்கள் ஆரம்ப அறிகுறிகளை அடையாளம் காண முடிந்தால் இந்த நோயைத் தவிர்க்க முடியும் என்று மருத்துவர் நிலந்த ரத்நாயக்க கூறினார்.

“முதல் அறிகுறி ஈறுகளில் இரத்தப்போக்கு. ஆனால், பற்பசை பயன்படுத்துவதால் மக்களால் இதை அடையாளம் காண முடியவில்லை. ஈறுகளில் இரத்தம் வருகிறதா என்று பார்க்க, மாதத்திற்கு ஒரு முறையாவது பற்பசை இல்லாமல் பல் துலக்குமாறு நான் மக்களுக்கு அறிவுறுத்துகிறேன்,” என்று அவர் கூறினார்.

இந்தச் செயல்முறையின் போது ஈறுகளில் இரத்தம் கசிந்தால், மருத்துவ உதவியை நாடுமாறு மருத்துவர் நிலந்த ரத்நாயக்க பொதுமக்களுக்கு அறிவுறுத்தினார்.

# “இன ரீதியாக பார்ப்பது முற்றிலும் தவறானது”

அர்ச்சுனா எம்.பி. தொடர்பில் சபாநாயகர் எடுத்த தீர்மானத்தை இன ரீதியாகப் பார்ப்பது முற்றிலும் தவறானது. சபாநாயகரின் தீர்மானத்திற்கும், அரசாங்கத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என கிராமப்புற மேம்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

இந்த பாராளுமன்றத்தில் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், ஆர் . சம்பந்தன் ஆகிய சிரேஷ்ட அரசியல் தலைவர்கள் பதவி வகித்துள்ளார்கள். எதிர்க்கட்சித் தலைவர்களாகவும் பதவி வகித்துள்ளார்கள். தேசிய ரீதியான பிரச்சினைகள் தோற்றம் பெறும் போது நடுநிலையாக இருந்தும் செயற்பட்டுள்ளார்கள். ஆகவே, இவர்கள் மீது எமக்குச் சிறந்த மரியாதை ,கௌரவம் உள்ளது.

பாராளுமன்றத்தில் தற்போது அங்கம் வகிக்கும் தமிழ் மற்றும் முஸ்லிம் சக பிரதிநிதிகளிடம் இணக்கமாகவே செயற்படுகிறோம். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் செயற்பாடுகள் தொடர்பில் சபாநாயகர் புதன்கிழமை விசேட அறிவிப்பைச் சபையில் விடுத்திருந்தார். இவ்விடயம் தொடர்பில் எமது சிரேஷ்ட சக உறுப்பினராக எஸ். சிறீதரன் பல விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

எமது சக பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மீது எமக்கு அதீத கௌரவம் உள்ளது. ஆகவே, இந்த விடயத்தை இன ரீதியாகப் பார்க்க வேண்டாம் என்று தயவுடன் கேட்டுக் கொள்கிறோம். யார் தவறிழைத்தாலும் அதற்கான பிரதிபலனை அனுபவிக்க வேண்டும்.

குறித்த பாராளுமன்ற உறுப்பினர் தொடர்பில் சபாநாயகர் தீவிரமாக ஆராய்ந்து, அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தத்துவங்களுக்கு அமைவாகவே தீர்மானம் எடுத்துள்ளார்.இந்த விடயத்தில் அரசாங்கம் தலையிடவில்லை. தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது என்றார்.

# “நல்லிணக்கத்திற்கு பாதிப்பாகலாம்”

தமிழ் பாராளுமன்ற உறுப்பினராக அர்ச்சுனாவுக்கான தடை இந்த பாராளுமன்றத்தில் முதன் முதலில் வந்துள்ளமை ஆரோக்கியமான விடயமா ?. பாராளுமன்ற உறுப்பினர் மீதான குற்றம் இன்னும் எத்தனையோ பேருக்குப் பாயலாம், இது தேசிய நல்லிணக்கத்திற்குப் பாதிப்பாகலாம் என தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்டஎம்.பி. சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை (20) நடைபெற்ற வரவு-செலவுத் திட்டத்தில் நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கான ஒதுக்கீடு மீதான முதலாம் நாள் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.அதன்போது சிறீதரன் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தில் சபாநாயகரால் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் மீதான தடைகள் அறிவிக்கப்பட்டன. குறிப்பாக 8 நாட்களுக்கு அவருடைய பேச்சுகளை ஒளிபரப்பு செய்யப்படாமலும், ஹன்சாட்டில் பதியப்படாமல் இருப்பதற்கான செய்திகளை சபாநாயகர் அறிவித்திருந்தார். அவர் பாராளுமன்றத்திற்குப் பொருத்தமில்லாத சொற்களைப் பயன்படுத்தியிருந்தார் என்று கூறப்பட்டது. இந்த சீருயர் சபையின் பொறுப்பாளர் என்ற வகையில் அவர் எடுக்கும் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டு நாங்கள் நடக்கின்றோம்.

ஆனால், சபையைப் பயன்படுத்தி பெண்கள் மீதான அல்லது பெண்களுக்கு எதிரான வன்மங்களைக் கொண்டு வருவதையோ அல்லது ஒரு சமயம் சார்ந்து, மார்க்கம் சார்ந்து இருக்கின்ற முஸ்லிம் சகோதரர்களுக்கு எதிராக வன்மங்களைக் கொட்டுவதையோ நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எங்களுக்கும் முஸ்லிம் சகோதரர்களுக்கும் இடையே நீண்ட கால அன்னியோன்னிய உறவு உண்டு, கடந்த யுத்த காலத்தில் ஏற்பட்ட மனக் கசப்புகளை மீண்டும் மீண்டும் ஆய்வு செய்வது அல்லது அதனைத் தோண்டிப் பார்ப்பதல்ல இப்போதைய நோக்கம். நாங்கள் தமிழ் பேசும் மக்களாக அவர்களுடைய மார்க்கம், சம்பிரதாயம், கலாச்சாரங்களை மதித்து நடப்பவர்களே.

அதற்கு எதிரானவர்களும் அல்ல.

அர்ச்சுனா எம்.பி பேசிய சில விடயங்களில் தவறுகள் இருக்கலாம். அவ்வாறு தவறுகள் இருந்தால் ஒட்டுமொத்த தமிழ் மக்கள் சார்பாக நாங்கள் அதற்காக மன்னிப்பு கேட்கின்றோம். முஸ்லிம் மக்கள் அதனைப் பெரிய விடயமாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்பது எமது வினயமான வேண்டுகோளாகும்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினராக அர்ச்சுனாவுக்கான தடை இந்த பாராளுமன்றத்தில் முதன் முதலில் வந்துள்ளமை ஆரோக்கியமான விடயமா என்று யோசிக்கின்றேன். நான் நீண்ட நேர ஆய்வுகளின் பின்னர் இந்த பதிவை நான் செய்கின்றேன். பாராளுமன்ற உறுப்பினர் மீதான குற்றம் இன்னும் எத்தனையோ பேருக்குப் பாயலாம், இது தேசிய நல்லிணக்கத்திற்குப் பாதிப்பாகலாம் என்ற வார்த்தைகள் சில தேடல்களை நோக்கி நகர்த்தியது என்றார்.

# “வாழைச்சேனையில் பல்பொருள் வலயம்”

வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையுடன் இணைந்ததாக பல்பொருள் உற்பத்தி வலயத்தை அமைக்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என்று கைத்தொழில் பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (20) இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரனால் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே பிரதி அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

வாழைச்சேனை காகித தொழிற்சாலை 1960களில் பல நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கிய பெரிய நிறுவனமாகும். உள்நாட்டு யுத்தத்தைக் காரணமாகக் கொண்டு இத்தொழிற்சாலை கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக மூடப்பட்டு உள்ளது. இத்தொழிற்சாலை மீள இயங்குமானால் பல இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்க முடியும். இத் தொழிற்சாலையை இயக்குவதற்கான ஏற்கனவே முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளும் அவை வெற்றிபெறாமைக்கான காரணங்களையும் அமைச்சர் தெளிவுபடுத்துவாரா? என்று கேட்டார். இதற்குப் பதிலளித்த கைத்தொழில் பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க கூறுகையில்,

புதுப்பித்தல் நடவடிக்கை ஊடாக மாதத்திற்கு 300 தொன் உற்பத்தியைச் செய்யவே எதிர்பார்க்கப்படுகின்றது. தனியார் - அரச கூட்டுறவுடன் புதிய தொழில்நுட்பங்களைக் கொண்டுவந்து அதை மேலும் முன்னேற்ற நடவடிக்கை எடுப்போம் என்றார்.





## ‘ரன் மல்லி’யின் நண்பர் கைது

மாத்தறை தொழில்நுட்பக் கல்லூரியில் பணியாற்றிய, 42 வயதான முன்னாள் சாரதி ஒருவர் 460 மில்லியன் ரூபாய்க்கு அதிக பெறுமதியுடைய 33 கிலோ 106 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகத்திற்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, சந்தேக நபரின் வீட்டில் உள்ள ரகசிய அறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் வெளிநாட்டில் தலைமறைவாக இருக்கும் போதைப்பொருள் கடத்தல்காரர் ‘ரன் மல்லி’ என்பவரின் நண்பன் என்றும், ரன் மல்லிக்குச் சொந்தமான போதைப்பொருட்களை பல்வேறு பிரதேசங்களில் விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.


## தாயைக் கொன்ற மகன் கைது

போதைப்பொருள் வாங்குவதற்குப் பணம் கொடுக்க மறுத்த 68 வயதான தாயை அடித்து கொலை செய்த 48 வயது மகன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் கொழும்பு, தெமட்டகொடை, பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 450 தேங்காய்களை திருடிய மூவர் கைது

அனுராதபுரம் - நொச்சியாகம , ஹால்மில்லேவ பிரதேசத்தில் உள்ள தென்னந்தோப்பு ஒன்றுக்குள் நுழைந்து சுமார் ஒரு இலட்சம் ரூபாய்க்கு அதிக பெறுமதியான 450 தேங்காய்களைத் திருடியதாகக் கூறப்படும் மூவரை, நொச்சியாகம பொலிஸார் சந்தேகத்தில் கைது செய்துள்ளனர்.

அந்த தென்னந்தோப்பின் 70 வயதுடைய உரிமையாளரால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே, 24,27 மற்றும் 30 வயதான சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



## வீதியை விட்டு விலகிய கார்



ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியாவில் இருந்து ஹட்டன் நோக்கி அதி வேகமாக பயணித்த கார், திம்புள்ள பத்தனை சந்திக்கு அருகில் புதன்கிழமை (19) மாலை வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சாரதி மாத்திரம் காரில் பயணித்த உள்ளதாகவும் அவருக்குக் காயம் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கமே விபத்துக்கான காரணம் என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## “சிகரெட் மீதான வரி தவறாது”

சிகரெட் மீதான வரி விதித்தல் முறைமை தவறு. எனினும், வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக சிகரெட் வரி திருத்தம் தொடர்பான யோசனைக்கு அனுமதி வழங்கியுள்ளோம் என அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவரும் எம்.பியுமான கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (20) இடம் பெற்ற அமர்வில் அரசாங்க நிதி பற்றிய குழுவின் செயலாற்றுகை அறிக்கைகளை சபைக்கு சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

சிகரெட் வரி திருத்தம் தொடர்பில் இரண்டாவது தடவையாகவும் குழுவுக்கு முன்னிலையான அதிகாரிகள் ஒரு சில விடயங்களைச் சுட்டிக்காட்டினார்கள். இதற்கமைய வரவு- செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில் சிகரெட் வரி திருத்தத்துக்கு அனுமதி வழங்கியுள்ளோம்.

சிகரெட் ஒன்று விற்பனை செய்யப்படும் போது 75 சதவீத வரியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று உலக சுகாதார தாபனம் மற்றும் நிதியியல் கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் வரி விகிதம் கடந்த காலங்களில் வீழ்ச்சியடைந்துள்ளது.

சிகரெட் வரி விதிப்பு முற்றிலும் தவறானது. ஆகவே இந்த வரி விதிப்பு தொடர்பில் புதிதாக சிந்திக்க வேண்டும். பணவீக்க பெறுமானத்துக்கு அடிப்படையில் வரி விதிக்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. இருப்பினும் இதில் பாரிய குளறுபடிகள் காணப்படுகின்றன. அனைத்து வகையான புகை பொருட்களுக்கும் 5.9 சதவீத வரி அறவிடும் போது இயல்பாகவே வரி அறவிடும் போது குளறுபடிகள் தோற்றம் பெறும் என்றார்.



## சிற்றுண்டிச்சாலைக்கு அபராதம்

பாறுக் ஷிஹான்



சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய எல்லைக்குட்பட்ட தென்கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் உள்ள பெண்கள் விடுதி சிற்றுண்டிச்சாலை உட்பட சம்மாந்துறைப் பகுதியில் உள்ள சிற்றுண்டி உற்பத்தி நிலையங்கள், இறைச்சிக் கடைகள் என்பன சுகாதார முறையில் காணப்படவில்லை என சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத் தலைமையிலான குழுவினரினால் திடீர் சோதனை நடவடிக்கை புதன்கிழமை (19) இடம்பெற்றது. இதன் போது, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத குறித்த சிற்றுண்டிச்சாலை உரிமையாளருக்கு எதிராகவும் இரண்டு உணவகங்களுக்கும் எதிராகவும் வழக்கு தாக்கல் மேற்கொள்ளப்ப ட்டு சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட போது, 30 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

## “நிதி பெற்றது தொடர்பாக தேசபந்துவிடம் விசாரிக்கவும்”

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் அரச பதவியை வகித்துக் கொண்டு கிரிக்கெட் சபையிடமிருந்து நிதி மற்றும் பெறுமதி மிக்க பரிசுகளை பெற்றது தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என பதில் பொலிஸ் மா அதிபரிடம் வலியுறுத்து கிறோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட எம்.பி. ஹேஷா விதானகே தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (20) இடம்பெற்ற 2025 பட்ஜெட் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்று கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தின் போது பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு இலங்கை கிரிக்கெட் சபை கொடுப்பனவு மற்றும் பரிசுகளை வழங்கியது என்று குறிப்பிட்டிருந்தேன். தேசபந்துக்கு எவ்விதமான கொடுப்பனவும் வழங்கப்படவில்லை என்று கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடி தொடர்பாக பா ராளுமன்றத்தில் பலமுறை பேசியுள்ளோம். பல அறிக்கைகளையும் சமர்ப்பித்து ள்ளோம். தேசப்பந்து தென்னகோனுக்கு எவ்வித கொடுப்ப னவும் வழங்கவில்லை என்று கிரிக்கெட் சபை தற்போது கூறுகிறது.

தேசபந்து தென்னகோனுக்கு கொடுப்பனவு, 200 லீற்றர் எரிபொருள், தொலைபேசி மற்றும் மடிக்கணினி ஆகியவற்றை வழங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்து ஆவணத்தை சபைக்கு சமர்ப்பிக்கிறேன் அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

### மெண்டிஸ் நிறுவனத்திடம்

## “பணம் பெற்ற அரசியல்வாதிகள்”

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி கொடுக்கல் வாங்கலில் அர்ஜூன அலோசியஸின் மெண்டிஸ் நிறுவனத்திடம் இருந்து நிதி பெற்ற அரசியல்வாதிகளின் பெயர் விபரங்கள் வெகு விரைவில் வெளியிடப்படும் என வர்த்தகம், வாணிபம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (20) இடம்பெற்ற வரவு -செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய அறிக்கையில் அடிக்குறிப்பு எழுதியவர்கள் பற்றி ஓரிரு விடயங்களைக் கூறினார் . முழுமையாகப் பெயர் விவரங்களை வெளியிட வேண்டும்.

பிணைமுறி மோசடி விவகாரம் கடந்த காலங்களில் பரவலாகப் பேசப்பட்டது.அலோசியஸ் மற்றும் அவரது தந்தை ஆகியோர் கைச்சாத்திட்ட 156 காசோலைகளில் தனியார் வங்கி ஒன்றின் ஊடாக நிதி பரிமாற்றபட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகள் தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அலோசியஸிடம் இருந்து நேரடியாக நிதி பெற்ற அரசியல்வாதிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.இந்த நபருக்கு சொந்தமான நிறுவனத்தில் இருந்து மதுபான நிலையங்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. அரசியல்வாதிகள் குறித்த மதுபான நிலையத்துடன் கொடுக்கல் வாங்கல் செய்துள்ளார்கள். ஆகவே, மதுபான நிலையத்தின் உரிமையாளர்கள் எதிர்வரும் காலங்களில் சாட்சி சொல்ல வேண்டி வரும் என்றார்.





## இறந்த நிலையில் காட்டு யானை மீட்பு

எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார்-மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் விளாங்குடி கிராமத்தில் உள்ள வயலில், உயிரிழந்த நிலையில் கிடந்த யானை ஒன்று புதன்கிழமை (19) மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதிக்குச் சென்றவர்கள் யானை உயிரிழந்து கிடப்பதை அவதானித்து உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் பொலிஸார், மன்னார் மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், வன ஜீவராசிகள் திணைக்கள வைத்தியர் ஆகியோர் குறித்த யானையைப் பார்வையிட்ட பின்னர் மேற்கொண்ட சோதனையின் போது மின்சாரம் தாக்கத்தில் யானை உயிரிழந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. .

குறித்த விவசாய காணியின் உரிமையாளர் மன்னார் மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில்ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## போதை குளிசைகளுடன் இளைஞன் கைது

### நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை

பு.கஜிந்தன்

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொக்குவில் பகுதியில் 290 போதை மாத்திரைகளுடன் 27 வயதுடைய இளைஞர் ஒருவர், வியாழக்கிழமை (20) கைது செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், மானிப்பாய் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஜிஜே.குணதிலக்க கீழ் இயங்கும் பொலிஸ் குழுவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்.

விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# போலி மகிழ்ச்சியால் உண்மையான மகிழ்ச்சியை இழந்து தவிக்கிறோம்

உலகில் உள்ள பல்வேறு பொருட்களின் அளவை அளவிடுவதற்கு குறி காட்டிகள் உள்ளன. சில குறி காட்டிகள் ஒரு குறிப்பிட்ட நாட்டின் உணவுப் பாதுகாப்பை அளவிடுகின்றன. மற்றொரு நாடு ஊட்டச்சத்துக் குறைபாட்டை அளவிடுவதற்கான குறி காட்டிகளைக் கொண்டுள்ளது. உணவு வீணாக்கப்படுவது. பணவீக்கம் பொருளாதார போக்குகளை அளவிடுவதற்கான குறி காட்டிகளும் உள்ளன.

அவற்றில், மனித மகிழ்ச்சியை அளவிடுவதற்கான ஒரு குறியீடும் உள்ளது. உலகில் எந்த நாட்டில் மக்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்பதைக் கண்டறியவும், மகிழ்ச்சியின் அளவைக் கொண்டு உலகின் மகிழ்ச்சியான நாடுகளைத் தரவரிசைப்படுத்தவும் குறி காட்டிகள் உள்ளன. இது மகிழ்ச்சி குறியீடு என்று அழைக்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 20 ஆம் திகதி உலக மகிழ்ச்சி தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. 2024ஆம் ஆண்டு மகிழ்ச்சி குறியீட்டு அறிக்கையின் பிரகாரம், 143 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், 128ஆவது இடத்தில் இலங்கை இருக்கிறது. 143ஆவது இடத்தில் ஆப்கானிஸ்தான் உள்ளது. முதலாவது இடத்தில் பின்லாந்து உள்ளமை குறிப்பிடத்தக்கது.

2023ஆம் ஆண்டு உலக மகிழ்ச்சி குறியீட்டு அறிக்கையின்படி, 112ஆவது இடத்தை இலங்கை எட்டியிருந்தது. 2024ஆம் ஆண்டு 128ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதன் பொருள் இந்த ஆண்டு எங்களுக்குத் துன்பம் அதிகரித்துவிட்டது. துன்பத்திற்கான காரணத்தைக் கண்டுபிடித்து, துன்பத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான வழிகளைக் கண்டறிய வேண்டும். அதனூடாக நாம் வாழ்க்கையை வெல்ல முடியும்

உலகிலேயே மிகவும் மகிழ்ச்சியான நாடாக கடந்த ஆறுக்கு மேற்பட்ட ஆண்டுகளாகப் பின்லாந்து உள்ளது. பின்லாந்தின் 75 சதவீதத்துக்கும் அதிகமான நிலம் மரங்களால் சூழப்பட்டுள்ளது. உலகிலேயே மிகவும் மேம்பட்ட பாடசாலை அமைப்பையும் கொண்டுள்ளது. உலகிலேயே அதிக அளவு நீர் வளங்களைக் கொண்ட நாடும் பின்லாந்துதான்.

சிலர் மது அருந்துவதை ரசிக்கிறார்கள். மற்றவர்கள் சீட்டாட்டம் விளையாடுவதை ரசிக்கிறார்கள். மற்றவர்கள் பணம் சம்பாதிப்பதிலும், சொத்து குவிப்பதிலும், மற்றவர்களை அவதூறு செய்வதிலும், மனு கொடுப்பதிலும் மகிழ்ச்சியைக் காண்கிறார்கள். இதையெல்லாம் உண்மையான மகிழ்ச்சி என்று சொல்ல முடியாது, போலி மகிழ்ச்சி என்று சொல்லலாம்.

நம் நாட்டு மக்கள் மகிழ்ச்சிக் குறியீட்டில் ஒருபோதும் உயர்ந்த இடத்தைப் பெறுவதாகத் தெரியவில்லை. குப்பை சேகரிப்பவர்கள், குடிகாரர்கள், கொள்ளையர்கள் மற்றும் பாலியல் வன்கொடுமை செய்பவர்கள் நிறைந்த ஒரு நாட்டில், மது போத்தலிலோ அல்லது நேர்மையற்ற வேலையிலோ மகிழ்ச்சியைக் காணும் பலர் உள்ளனர் என்பதுதான் உண்மை.

நம்முடைய மதிப்பை காட்டி நாமே மகிழ்ச்சியடைந்து கொள்வதைவிட, பிறருக்கு எவ்வாறு மகிழ்ச்சியைத் தரலாம் என்று சிந்திப்பதும், அவர்களுக்கு எப்படி உதவலாம் என்ற சிந்தனையுமே மற்றவர்களோடு நம்மை இணைக்கிறது. சுருக்கமாகச் சொன்னால் இதுதான் சுயநலத்திற்கும், பிறரின் நலனில் உண்மையான அக்கறைப்படுவதற்கும் இருக்கும் வேறுபாடாகும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

பெரும் பசியைவிட மனம் களைத்துப் போவதே கடினமானது. அதை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கு நேரமும் எடுக்கின்றது.

எல்லோரது நெஞ்சமும் அடிக்கடி சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப மாறுவதுண்டு. சிலவேளை நகைப்பார்கள்; சிலசமயம் வேலைப்பழுவால் எரிச்சல் படுவார்கள். குழந்தைகளை ஆர்வத்துடன் அணைக்கும்போது சந்தோச சாகரத்தில் மூழ்கிவிடுவார்கள். உணர்ச்சிக்கு மனிதன் அடிமையாகின்றான்.

ஆர்வத்துடன் பணி செய்பவர்கள், திடீர்ரெனக் கிடைக்கும் அதிர்ச்சித் தகவல்களால், தங்கள் நிலை மறந்து விடுகின்றனர். அவை சந்தோசமானவையாகவும் இருக்கலாம். துன்பமான செய்தி கேட்ட மனம், பலம் இழந்து விடுகின்றது.

முரண்பாடான மாறு நிலை வாழ்க்கையில் இயல்பானது என்பார்கள். கட்டுப்படுத்தும் நிலையை, பொறுமையுடன் உருவாக்குக!

இந்நிலையில் இருந்து விடுபடுவது எப்படி? எங்களால் எல்லாச் சந்தர்ப்பத்திலும் தன்னிலை மறக்காமல் இருந்து, தங்களைச் சுவீகரிக்க மன ஒடுக்கம் முக்கியமானது.

தியானம், சிந்தனைகளை தெளவூட்டும். எதையும் அதிர்வுடன் நோக்காமல், சாந்தமான நிலையில் நோக்குவதற்குக் கொண்டுவந்துவிடும். தனிமை தேவையானது. அமைதியை ஊட்டுகின்றது.

பருத்தியூர் பாலா.வயிரவநாதன்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை – 12

# பட்ஜெட்டில் முதன்முதலாய் துண்டுவிழுந்தது

சுதந்திரத்திற்குப் பிந்தைய இலங்கையின் பொருளாதாரத்தை அனைவருக்கானதாகக் கட்டியெழுப்ப ஐக்கிய தேசியக் கட்சியால் இயலவில்லை. ஆட்சியில் இருந்தோரின் உயர்வர்க்க நலன்கள் இலங்கையர் அனைவருக்குமான ஒரு பொருளாதாரக் கொள்கையை உருவாக்க இடம் தரவில்லை. சுதந்திரத்துக்கு முந்தைய காலத்தில் நிலைபெற்ற சமூகநலன்களைத் தொடர வேண்டிய கட்டாயம் அரசாங்கத்திற்கு இருந்தது. இதனால் வருமான மறுபகிர்வு மற்றும் சமத்துவ சமூகத்தைக் கட்டியெழுப்புவது பற்றி அரசாங்கம் தொடர்ந்து பேசியது. ஆனால் இது மக்கள் மீதான உண்மையான அக்கறையால் அல்ல, அடுத்துவரவுள்ள தேர்தலில் வெற்றிபெறுவதற்கான உத்தியாகவே அரசாங்கம் இதைப் பார்த்தது. ஆனால், அரசாங்கம் முன்னெடுத்த சமூக நலத்திட்டங்களுக்கான நிதியை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது பற்றி அதிகம் சிந்திக்கவில்லை. தேசிய முன்னுரிமைகளைப் பகுத்தறிந்து ஏற்றுமதி பொருளாதாரத்தின் உள்ளார்ந்த பலவீனங்களைப் புரிந்து கொள்ளத் தவறியது. 1947-53 காலகட்டத்தில், மொத்த பரிமாற்றிக் கொடுப்பனவுகள் சராசரியாக 5.7% ஆகவும், உணவு மானியங்கள் மட்டும் மொத்த தேசிய உற்பத்தியில் சுமார் 2.7% ஆகவும் இருந்தன. உணவு மானியங்களுக்கான செலவு ரூ.675 மில்லியனாக இருந்தது - 1952-3ஆம் ஆண்டில் மொத்த பட்ஜெட் பற்றாக்குறை ரூ.709 மில்லியனாக இருந்தது. அரசாங்கம் தனது இருப்பைச் செலவழிப்பதன் மூலமும் வங்கிக் கடன் வாங்குவதன் மூலம் மட்டுமே இந்த பற்றாக்குறையைக் கையாள முடிந்தது.

நிதியமைச்சர், தனது 1951-2 பட்ஜெட்டில், பட்ஜெட் கொள்கையின் புதிய நோக்கத்தை அறிவித்தார்: "பட்ஜெட் என்பது அரசாங்க வருவாய் மற்றும் செலவினங்களை சமநிலைப்படுத்துவதாக மட்டுமே இருக்க வேண்டும் என்ற முந்தைய கருத்தை நாம் ஏற்கவில்லை. இப்போது பட்ஜெட் கொள்கையின் நோக்கம் தேசிய பொருளாதார நடவடிக்கைகளின் முழு வடிவத்தையும் கட்டுப்படுத்துவதாகும்". ஆனால், ஐ.தே.க. அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டங்களில் உண்மையில் நடந்தது என்னவென்றால், பட்ஜெட்டுகள் சமநிலைப்படுத்தப்படவில்லை அல்லது தேசிய பொருளாதார நடவடிக்கைகளின் வடிவத்தில் எந்த கட்டுப்பாடும் பயன்படுத்தப்படவில்லை. இந்தக் கொள்கைத் தோல்வியின் பேரழிவு விளைவுகள் 1953இல் கொரியப் போர் ஏற்பட்டவுடன் விரைவில் தெளிவாகத் தெரிந்தன.

இதனையடுத்து, நிதியமைச்சர் இவ்வாறு கருத்து தெரிவித்தார். 'நமது ஏற்றுமதிச் சரிவு, நமது ஏற்றுமதி விலைகளில் கடுமையான வீழ்ச்சி மற்றும் இறக்குமதி விலைகளின் உயர்வு என்பன இப்போது தவிர்க்கவியலாதது. இந்த அனைத்து காரணிகளின் கலவையும் பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்குப் பங்களிக்கக்கூடும். பட்ஜெட்டால் உருவாக்கப்பட்ட ஒட்டுமொத்த பற்றாக்குறையை நீக்குவதற்கான தீர்வு எம்மிடம் உள்ளது என்பது எனக்குத் தெரியும். ஆனால், உணவுக்கான மானியத்தையும் நீக்காமல் இந்த நடவடிக்கையை எடுக்க முடியாது."

இந்த வார்த்தைகளில், அவர் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு (அவரது 1947-48 பட்ஜெட்டில்) 'முற்போக்கான சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள்' என்று விவரித்த நலன்புரி நடவடிக்கைகளில் கடுமையான வெட்டுக்கு நாட்டைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தார். ஆகஸ்ட் 1953இல், அரிசி மானியம் இரத்து செய்யப்பட்டது மற்றும் அரிசியின் விலை 25 சதத்திலிருந்து 70 சதமாக உயர்ந்தது. பள்ளிக் குழந்தைகளுக்கான இலவச மதிய உணவும் இரத்து செய்யப்பட்டது. சீனியின் விலை அதிகரிக்கப்பட்டது, பொது உதவித்தொகை குறைக்கப்பட்டது, புகையிரத கட்டணங்கள் மற்றும் அஞ்சல் கட்டணங்கள் இரட்டிப்பாயின. பால் வழங்கும் மையங்கள் ஏற்கெனவே மூடப்பட்டிருந்தன. 1952 ஜனவரியில் ரூ.1,208 மில்லியனாக இருந்த நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்கள் அடுத்த ஜூலை மாதத்திற்குள் ரூ.685 மில்லியனாகக் குறைந்து விட்டன. பணக்காரர்கள் மற்றும் சலுகை பெற்ற வகுப்பினரைத் தொடாமல் விட்டுவிட்டு, ஏழை சமூகத்திற்குச் செல்லும் மறுபகிர்வு செலவினங்களைக் குறைப்பதன் மூலம் அரசாங்கம் பொருளாதாரத்தை புதுப்பிக்க முயன்றது.

ஒருபுறம் இந்தப் பற்றாக்குறையாலும் மறுபுறம் தொழிலாளர் நலன்கள் மோசமாக்கப் பாதிக்கப்பட்டமையாலும் எழுந்த கோபம், ஆகஸ்ட் 12, 1953 அன்று சுதந்திர இலங்கையில் முதல் வெகுஜனப் போராட்டமான ஹர்த்தாலாக வெடித்தது. நாடு வன்முறைக் கலவரங்களால் சூழப்பட்டது. அவசரகால நிலை மற்றும் ஊரடங்கு உத்தரவு அறிவிக்கப்பட்டது, நிலைமையை கட்டுப்படுத்த அடக்குமுறை மற்றும் பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. காவல்துறை மற்றும் இராணுவத் துப்பாக்கிச் சூட்டில் பலர் கொல்லப்பட்டனர், மேலும் 1952இல் தனது தந்தைக்குப் பிறகு பிரதமராகப் பதவியேற்ற டட்லி சேனநாயக்க இராஜினாமா செய்தார். அவருக்குப் பிறகு அவரது மாமா ஜோன் கொத்தலாவல பதவியேற்றார். அவர் தனது புதிய அமைச்சரவையில் ஜே.ஆர்.ஜெயவர்தனவுக்குப் பதிலாக எம்.டி.எச்.ஜெயவர்தன நிதியமைச்சராக நியமிக்கப்பட்டார். கொத்தலாவலவின் ஐ.தே.க. அரசாங்கம் 1954 நவம்பரில் அரிசி மானியத்தை உயர்த்தியது மற்றும் மே 1955இல் அதன் விலையை 55 சதமாகக் குறைத்தது.

அரிசிப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தாலும், அல்லது இன்னும் சரியாகச் சொன்னால், அதைத் தள்ளிப் போட்டாலும், அக்காலப்பகுதியில் மொழிப் பிரச்சினை கொழுந்துவிட்டெரியத் தொடங்கியிருந்தது. இது அவரது மற்றும் ஐ.தே.கவின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது மட்டுமல்லாமல், நாட்டை இனவெறி மற்றும் கலவரக் காலகட்டத்தில் தள்ளியது. இது நவீன இலங்கையின் அரசியலுடலில் தீர்க்கவியலாத ஒரு புண்ணாக மாறியது. ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக, ஆங்கிலம் நிர்வாகத்தின் 'அதிகாரப்பூர்வ மொழியாக' இருந்தது, ஆனால், 10 வீதத்திற்கும் குறைவான மக்களால் மட்டுமே அந்த மொழியைப் பேச முடிந்தது. எனவே, ஆங்கிலத்திலிருந்து மாறுவது நிகழ்ச்சி நிரலில் இருந்தது, மேலும் ஆங்கிலம், மக்களின் இரண்டு தாய்மொழிகளான சிங்களம் மற்றும் தமிழால் பிரதியீடு செய்யப்படும் என்று கருதப்பட்டது. மேலும், அதிகார மாற்றத்திற்கு ஒரு முன்நிபந்தனையாக இருந்த தேசிய ஒற்றுமையின் படத்தை பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு வழங்குவதற்காக, சிங்களத் தலைமை தமிழ் சிறுபான்மையினருக்கு சுதந்திரத்தின் பலன்கள் கூட்டாண்மை மற்றும் சமத்துவத்தில் அனுபவிக்கப்படும் என்று உறுதியளித்தது. இது நல்லெண்ணத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1954இல் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தபோது, இந்த உறுதிமொழியின்படி செயல்படுவதாக பிரதமர் கொத்தலாவெல உறுதியளித்து, "நாட்டின் அலுவல் மொழிகளாக சிங்களம் மற்றும் தமிழுக்கு சம அந்தஸ்து வழங்க அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்படும்" என்று அறிவித்தார்.

இந்த தீங்கற்ற அறிக்கை பெரும் சர்ச்சையைத் தூண்டியது. 'சம அந்தஸ்து' என்ற சொற்றொடர், சில சிங்களவர்களால் தமிழில் படித்து வேலை செய்ய வேண்டும் என்றும், அதன் மூலம் சிங்கள இனம் என்ற அடையாளத்தை இழக்க வேண்டும் என்றும் தவறாக சித்திரிக்கப்பட்டது. பின்னர் சிங்களப் பகுதிகளில் சிங்களம் மட்டுமே அதிகாரப்பூர்வ மொழியாக இருக்க வேண்டும் என்ற போராட்டம் தீவிரமடைந்தது. பிரச்சினை விரைவாகப் பரவியது. தீயில் எண்ணெய் ஊற்ற, அரசியல் கட்சிகள் விரைவில் நிலைப்பாடுகளை எடுத்தன. லங்கா சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் சிங்களம் மற்றும் தமிழ் இரண்டையும் அதிகாரப்பூர்வ மொழிகளாக அறிவித்தன, மேலும், டாக்டர் என்.எம்.பெரேரா இந்த மாற்றத்தை செயல்படுத்த லங்கா சமசமாஜக் கட்சியின் பாராளுமன்ற ஆதரவை உறுதியளித்தனர். பண்டாரநாயக்கவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமிழை 'நியாயமான முறையில்' பயன்படுத்தி 'சிங்களம் மட்டும்' என்று அறிவித்தது. 1950இல் லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து பிரிந்து விப்லவகாரி (புரட்சிகர) லங்கா சமசமாஜக் கட்சியை உருவாக்கிய பிலிப் குணவர்தன, தனது கட்சி 'சிங்களம் மட்டும்' என்பதை ஆதரிக்கிறது என்றும், தமிழை ஒரு பிராந்திய மொழியாகக் கொண்டிருப்பதாகவும் கூறினார். வன்முறை ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன, மொழிப் பிரச்சினை உணர்ச்சிவசப்பட்டது. சில ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்கள் 'சிங்களம் மட்டும்' என்ற கொள்கையை ஆதரிப்பவர்களாக மாறினர், இறுதியில் கொத்தலாவலவே ஐக்கிய தேசியக் கட்சியின் மொழிக் கொள்கை 'சிங்களம் மட்டும்' என்று மாறி விட்டதாக அறிவித்தார், இப்போது அவர் தமிழைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. தனது எதிரிகளின் எதிர்ப்பை ஏற்றுக்கொண்டதாக உணர்ந்த அவர், மொழிப் பிரச்சினையை வாக்காளர்களிடம் எடுத்துச் செல்ல முடிவு செய்து, பெப்ரவரி 18, 1956 முதல் நாடாளுமன்றத்தை முன்கூட்டியே கலைக்க அறிவுறுத்தினார்.

விஸ்வரூபம் எடுத்த மொழிப் பிரச்சினை நாட்டின் பொருளாதார நலன் குறித்த அக்கறைகளைப் பின் தள்ளியது. இனவாதத்தால் இலங்கையர்கள் தினந்தினம் ஊட்டப்பட்டனர். சீரழியும் நாட்டின் பொருளாதாரம் குறித்து யாரும் அக்கறைப்பட்டதாகத் தெரியவில்லை. தொடர்ச்சியாக பட்ஜெட்டில் துண்டுவிழுந்தது. இலங்கை தொடர்ந்து கடன் வாங்கியது. ஆனால், அது கவனிப்பாரற்ற விடயமாகவும் மொழிப் பிரச்சனை அடுத்தவேளை சோறு பற்றியது/ என்று மாறியது. இவ்வாறுதான் இனப் பிரச்சினை பொருளாதாரப் பிரச்சினையை மேவத் தொடங்கியது.

## கடிதங்கள்

### அமர முடியாத இருக்கைகளால் அசௌகரியம்

வடமாகாணத்தின் பிரதான நுழைவாயிலாகவும், பல மாவட்டங்களில் இருந்து வந்து செல்வோர் அதிகமாகக் கூடும் இடமாகவும் உள்ள வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் உள்ள இருக்கைகள், பயணிகள் அமர முடியாதவாறு உடைந்து, பழுதடைந்து காணப்படுவதுடன் அதில் அமருபவர் விழும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதனால், பஸ்கள் வரும் வரையிலும் பயணிகள் நின்றுகொண்டிருக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது . நீண்ட நேரம் எழுந்து நிற்க முடியாதவர்கள் குறித்த இருக்கையில் அமரும் போது உடலில் காயங்கள் ஏற்படுவதாகவும், இருக்கைகளில் இருந்து விழும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் இது தொடர்பாக உரிய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– க.அகரன்



# Prime Lands பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு கௌரவம்

Prime Lands (Pvt) Ltd இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ருமிந்த ரன்தெனிய, ஆண்டின் சிறந்த வியாபார தலைவர் விருதுகள் வழங்கும் நிகழ்வில் ரியல் எஸ்டேட் பிரிவில் 'ஆண்டின் சிறந்த பிரதம நிறைவேற்று அதிகாரி' எனும் கௌரவிப்பைப் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வு இலங்கையின் ரியல் எஸ்டேட் துறையில் சிறந்த தலைமைத்துவம் மற்றும் உயர் பங்களிப்பு போன்றவற்றை வழங்கியிருந்தமைக்காக CMO ஆசியாவினால் வழங்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வு மும்பை தாஜ் லான்ட்ஸ் என்ட் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது.




துறையில் 25 வருடங்களுக்கு அதிகமான அனுபவத்தைக் கொண்ட ரந்தெனிய, இலங்கையின் ரியல் எஸ்டேட் துறையை புத்தாக்கமான செயற்பாடுகள் மற்றும் மூலோபாய தலைமைத்துவம் போன்றவற்றினூடாக மாற்றியமைப்பதில் முக்கிய பங்காற்றியிருந்தார். Prime Lands இன் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் Prime Group இல் Bhoomi Realty Holdings, Regent Caterers மற்றும் Regent Country Club போன்ற பல்வேறு நிறுவனங்களின் நிறைவேற்று பணிப்பாளர் எனும் வகையில், தொடர்ச்சியாக தூர நோக்குடைய தலைமைத்துவம் மற்றும் வியாபார முன்னேற்றத்தில் கவனம் செலுத்தியிருந்தார்.

Prime Group இன் தவிசாளர் பிரேமலால் பிராஹ்மனகே மற்றும் இணை தலைமை அதிகாரி சந்தமினி பெரேரா ஆகியோர் கருத்துத் தெரிவிக்கையில், "இந்த பெருமைக்குரிய கௌரவிப்பினூடாக எமது பிரதம நிறைவேற்று அதிகாரியின் சிறந்த தலைமைத்துவம் கொண்டாடப்படுவதுடன், ரியல் எஸ்டேட் துறையில் சிறப்பு மற்றும் புத்தாக்கத்துக்கான Prime Group இன் திரண்ட அர்ப்பணிப்பு போன்றவற்றுக்கான சான்றாக அமைந்துள்ளது. அவரின் வழிகாட்டலில், நாம் தொடர்ச்சியாக இலங்கையின் ரியல் எஸ்டேட் துறையை மாற்றியமைப்பதில் கவனம் செலுத்தியிருந்ததுடன், வாடிக்கையாளர் தன்னிறைவில் கவனம் செலுத்தி, துறையின் முன்னோடி எனும் Prime இன் நிலையை உறுதி செய்துள்ளோம்" என்றார்.

ருமிந்த ரந்தெனியவின் தலைமையின் கீழ் Prime Landsஇன் முக்கிய சாதனைகளில் ஒன்று, வீட்டின் உரிமையாளராகும் கனவை நனவாக்கிக் கொள்ள முடியாதிருந்த பல இலங்கையர்களுக்கு வீட்டு உரிமையாளராவதற்கான வாய்ப்பை வழங்கும் வகையில் புரட்சிகரமான 1% இலகு கட்டண முறையை அறிமுகப்படுத்தியதாகும். மேலும், நாட்டின் முதல் ரியல் எஸ்டேட் அழைப்பு மையத்தை நிறுவியதுடன் property ஹொட்லைன் வசதியை அறிமுகப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதிலும் இவரின் வழிகாட்டல், தொழிற்துறையில் வாடிக்கையாளர் சேவைக்கான புதிய நியமங்களை ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அவரின் தலைமைத்துவத்தின் கீழ், சந்தை முன்னோடி எனும் நிலையை Prime Group பேணியிருந்ததுடன், பரந்தளவு சந்தைப் பிரிவுகளுக்கு சேவையாற்றுவதற்கான புத்தாக்கங்களையும் விரிவாக்கங்களையும் மேற்கொண்ட வண்ணமுள்ளது.

ஆண்டின் வியாபார முன்னோடி விருது CMO ஆசியாவினால் முன்னெடுக்கப்பட்டதுடன், பல்வேறு துறைகளின் சிறந்த வியாபார தலைமைத்துவம் மற்றும் கூட்டாண்மை சிறப்பு ஆகியவற்றை கொண்டாடும் வகையில் அமைந்துள்ளது.

### ACCA விருதுகள் வழங்கலில்

# கொமர்ஷல் வங்கிக்கு இரு விருதுகள்

பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கம் (ACCA) நடத்திய நிலைபெறுதகுதன்மை அறிக்கையிடல் விருதுகள்-2025 நிகழ்வில், கொமர்ஷல் வங்கி அதன் 2023 வருடாந்த அறிக்கையில் நிலைபெறுதகுதன்மை தொடர்பான தகவல்களை பங்குதாரர்களுக்கு விரிவாக வெளிப்படுத்தியமையை அங்கீகரிக்கும் வகையில் இரண்டு விருதுகளை பெற்றுள்ளது.

இதற்கிணங்க, இந்த விருதுகள் நிகழ்வில் ஒட்டுமொத்த இரண்டாமிடத்துக்கான விருதை பெற்றதுடன் மற்றும் வங்கியியல் பிரிவில் வெற்றியாளராகவும் கொமர்ஷல் வங்கி தேர்ந்தெடுக்கப்பட்டது. வங்கி, அதன் 2022ஆம் ஆண்டறிக்கையில் இதேபோன்ற சாதனையை நிகழ்த்தியமைக்காக கடந்த வருடமும் ACCA ஆல் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ACCA நிலைபெறுதகு தன்மை அறிக்கையிடல் விருதுகள் உள்ளக மற்றும் வெளியக பங்குதாரர்களுக்கு வர்த்தகத்தின் பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்கங்களை தெளிவாக விளக்குவதுடன், நிலையான வளர்ச்சியின் இலக்கை நோக்கி நிறுவனத்தின் கொள்கைகள், இலக்குகள் மற்றும் நீண்டகால நோக்கங்களை வெளிப்படுத்தும் வருடாந்த அறிக்கைகளை அங்கீகரிக்கின்றன.


இதேவேளை, கொமர்ஷல் வங்கியின் 2023 வருடாந்த அறிக்கையானது CA ஸ்ரீ லங்காவின் 'TAGS' விருதுகள் 2024இல் விருதுகள் திட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட முக்கிய அம்சங்களான வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூரல், ஆளுமை மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றில் சிறந்து விளங்கியமைக்காக இரண்டு தங்கம், ஒரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கல விருதுகளையும் வென்றமை குறிப்பிடத்தக்கது.

கொமர்ஷல் வங்கியின் 2023 ஆண்டறிக்கையானது அதன் ஒட்டுமொத்த 55ஆவது அறிக்கையாக திகழ்வதுடன் மேலும் இது பசுமை இல்ல வாயு (GHG) நடுநிலைமையை பிரதிபலிக்கிறது. இது 2023ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் செயல்திறன் மற்றும் நிர்வாகத்தின் அனைத்து அம்சங்களையும் பற்றிய விரிவான தகவல்களை வழங்குகிறது.

கொமர்ஷல் வங்கியானது உலகின் தலைசிறந்த 1,000 வங்கிகளில் பட்டியலிடப்பட்ட முதலாவது இலங்கை வங்கியாகும். மற்றும் கொழும்பு பங்குச் சந்தையில் (CSE) வங்கித் துறையில் அதிக சந்தை மூலதனத்தைக் கொண்டுள்ளது. கொமர்ஷல் வங்கியானது இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி (SME) துறைக்கு மிகப்பெரிய கடனுதவி வழங்குவதோடு, டிஜிட்டல் கண்டுபிடிப்புகளில் முன்னணியில் உள்ளது.




# விலக்கிடு



சாதிய, கோத்திர வேற்றுமைகள் யாவும்
பெருவாரி இன்று குறைந்து விட்டன..!
ஆளுக்கொரு பேதமை கண்ட காலமும்
நளிவு பெறுவதும் மகிழ்வு தான்..!

யாவும் கடந்து இப்போது தான்
பாரிய அச்சம்!
பேயாக வந்து பயமுறுத்துகிறது..!

வீட்டுக்கிரு இளைஞர் மத்தியிலும்
பாடசாலை மாணவர் காற்சட்டை
பையிலும்
எதிர்கால சமூதாய நிலையோ
ஏடெடுக்கும் கரம் ஏந்தும் அவலம்..!

தீராத் துயரை அள்ளிக் கொட்டிட
பனை பிண்ணிய ஆலம்
கொடியெனவே
இளயவரை வரைந்து
கொண்ட – போதைப்பொருள்
வஞ்சகனின் நட்பு வாசம்..!

களவும் வன்புணர்வும்
அழிவும் அக்கிரமமும்
வேண்டாத தீய சொல் பேச்சும்..!
எங்கு பார்க்கிலும்
விபத்துக்களை விஞ்சிய
கொலையில் முடியும்
விதண்டா வாதங்களும்..!

போதைப்பொருள் பாவனை நீடிப்பின்
தூரம்
விழிமுன்னே எதிர்கால சமூதாயத்தில்
சதுராட்டம்..!
அந்தோ! துயர் சுமந்த சமுகம்
கலையிழந்த கைதி எனவே
உலகவரைபடத்தில்..!

எண்ணிப் பாருங்கள்..!
போதை காவி– இயலாமை என்றோர்
பெயர் பெற்று
கூனிக்குருகி ஆளுமை தொலைத்து
வீழ்வதா?
வென்று அதனை – மதியால்
உலகையாள்வதா?

இளைஞர் எம்மை நம்பியே– நாளைய
தம்பி கூட தாயின் கருவறையில்
அண்ணன் நீயும் போதைச்சிநேகம்
வளர்ப்பதா?

தீய போதை தீண்டி தீய்ந்தது போதும்!
தீமையில் மூழ்கி மூஞ்சடைத்து
முகிழ்ந்ததும் போதும்..!

போதை யார்?
புறந்தள்ளி எம்மை வீழ்த்திட..!
எம் கரம் ஓங்கட்டும்
போதைச்சர்வாதிகாரம் ஓயட்டும்..!

விழித்திடுங்கள் விண்ணப்பம் அல்ல
இதுவே நம் வீழ்ச்சியை தடுக்கும்
வீரியமாகும்..!


சிவநந்தினி யோகநாதன்

# உனக்கான வாழ்விது

உயிர் பெற்ற போதே
உருப்பெற்ற கனவு
உருமாறி உருக்குலைய
வேண்டுமா சொல்...

சுற்றி இருக்கும் கூட்டம்...
போடும் பல ஆட்டம்....
வீழ்த்தி உன்னை பார்க்க..
போட்டிடுவர் திட்டம்...

எழுந்து நிற்க வேண்டும்...
எதிர்த்து நிற்க வேண்டும்...
எளிதில் அணைந்திடா..
எரிமலையாய் இருக்க வேண்டும்...

வெற்றி வரும் போது
அருகிலும்...
வீழ்ந்து அழும் போது
தொலைவிலும்....
சுற்றிப்பலர் இருக்கவே...

வேகும் தீயாய்....
வெகுண்டெழும் மனதில்...
வெட்டி நியாயம் பேசுபவரை...
வெட்டி வீழ்த்திடு...
வெற்றியை நாடிடு...

கொதிக்கும் குருதியிலும்..
கொப்பளிக்கும் உன் கண்ணீரிலும்..
கொழித்து வைத்திடு...
கொல்ல வேண்டிய...
கொடுமைகளை...

உலகம் சொல்லும் வழியில்...
ஓடுவது அறிவல்ல...
உனக்கான பாதையில்...
ஓடுவதே புதிது...

மாறாத மாற்றமே...
மாற்றினால் ஏமாற்றமே...
உலகம் பொய் தோற்றமே...
உணர்ந்தால் ஞாலம் உனை போற்றுமே.....




ச.யதுர்திகா

இலங்கையில் விஞ்ஞானக் கல்வி

# சரியான பாதையில் பயணிக்கின்றதா?


(வியாழக்கிழமை தொடர்ச்சி...)

பிரான்ஸ், ஜேர்மனி, சுவிட்ஸர்லாந்து போன்ற நாடுகளில் இடைநிலைக் கல்வியின் மற்றொரு அம்சம் மாணவர்களை கல்வி மற்றும் தொழிற்கல்வியாகப் பிரிப்பது. இந்த அணுகுமுறை ஜப்பான் போன்ற ஆசிய நாடுகளில் குறைவாகவே பிரபலமாகவுள்ளது. மேலும் கலாசார காரணங்களுக்காக இலங்கையில் இது ஒருபோதும் கடைப்பிடிக்கப்படவில்லை. கல்விப் பிரிவில் இரண்டாம் நிலைக் கல்வியின் கடைசி மூன்று ஆண்டுகளில் பரந்த அளவில் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றது. பல்கலைக்கழக தகுதித்தேர்வில் குறைந்தது 5 பாடங்கள் வழங்கப்படுகின்றன. இது நாம் இலங்கையில் பின்பற்றும் பிரித்தானிய உயர் தரக் கல்வி முறையுடன் மாறுபட்டது. அனைத்து மாணவர்களும் கணிதம் மற்றும் குறைந்தபட்சம் இரண்டு மொழிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மேலும், விஞ்ஞான மாணவர்கள் சமூக விஞ்ஞானம் அல்லது மனித நேயத்தில் குறைந்தபட்சம் ஒரு பாடத்தை எடுத்துக் கொள்வார்கள். விளையாட்டு மற்றும் அழகியல் பாடங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. இன்றைய வேகமாக மாறிவரும் உலகில் உயர்தரக் கல்வி முறையைப் போன்ற ஆரம்ப அல்லது முன்கூட்டிய நிபுணத்துவம் இனி பொருத்தமானதல்ல. ஐரோப்பிய நாடுகளிலிருந்து பெறப்பட்ட யோசனைகளைப் பயன்படுத்தி நமது உயர் தரக் கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டிய நேரம் இதுவாக இருக்கலாம்.

கல்வி அமைச்சு 2024ஆம் ஆண்டில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட கல்விக்கொள்கை கட்டமைப்பு மற்றும் பாடத்திட்ட மாற்றத்தை அறிவித்துள்ளது. மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குள் நுழைவதில் உள்ள தேவையற்ற தாமதங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும் உடனடிக் கவனம் தேவைப்படும் சில விஞ்ஞானக் கல்வி சார்பான சிக்கல்களும் கலந்துரையாடப்பட்டன. திட்ட அடிப்படையிலான மதிப்பீடு கற்பவருக்கு விசாரணைகளை மேற்கொள்ளவும் ஆர்வத்தைத் தூண்டுவதற்கும் பரந்த வாய்ப்புகளை வழங்குகின்றது. இருப்பினும் சர்வதேச விதிமுறைகளுக்கு அமைவான மதிப்பீடுகளுக்கான சரியான தர நிலைகளை பெறுவது அர்த்த முள்ளகற்றல் விளைவுகளை அடைவதற்கு முக்கியமானதாக இருக்கும். இங்கு ஆசிரியரின் தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாடு இன்றியமையாததாக இருக்கும். மாணவர்களுக்கு கண்டு பிடிப்பு மற்றும் தொழில் முனைவுத்திறனை அனுபவிக்க வாய்ப்புகள் இல்லாமை முக்கிய கவனம் தேவைப்படும் ஒரு அம்சமாகும். விஞ்ஞானம் தொழில்நுட்பம் பொறியியல் கலை மற்றும் கணிதம் (STEAM) போன்ற ஒருங்கிணைந்த கற்றல் அணுகுமுறைகள்துறை ஆர்வங்களுடன் உருவாக்கப்பட்ட கற்றல் சூழல்கள் வெற்றிக்கு இன்றியமையாததாக இருக்கும். பருவநிலை மாற்றம் மற்றும் பாதிக்கக்கூடிய சமூகங்களின் தழுவல் போன்ற வளர்ந்து வரும் உலகளாவிய சவால்களிலிருந்து சூழல்களை ஒருங்கிணைப்பது தொடர வேண்டிய மற்றொரு பகுதி. விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் (SLAAS) போன்ற தொழில்முறை அமைப்புகள் அறிவியலைப் பிரபலப்படுத்துவதோடு கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்முனைவுத் திறனை மேம்படுத்துவதில் முக்கிய பங்குவகிக்கின்றது.

ஒட்டுமொத்தமாக விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்திற்கான கல்வி கொள்கையானது உள்ளடக்கத்தின் அளவை விட உள்ளடக்கத்தின் தரம் குறித்து அதிகக் கவனம் செலுத்தும் நடைமுறைப் பாடசாலை பாடத்திட்டத்தை ஊக்குவிக்கவேண்டும். பின்வரும் முன்முயற்சிகள் தகுந்த பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு முடிந்தவரை செயல்படுத்தப்பட வேண்டும் என்பதனை (SLAAS) கடுமையாகப் பரிந்துரைக்கிறது.

- கீழ்நிலைப் பள்ளியில் (தரம் 6-9) விஞ்ஞானக் கல்வி வலுப்படுத்தப்படவேண்டும். அதே நேரத்தில் பிரச்சினைகளைத் தீர்க்கும் மற்றும் நடைமுறை அம்சங்களை வலியுறுத்தும் வகையில் அமைய வேண்டும்.
- சாத்தியமான இடங்களில் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி விஞ்ஞானக் கல்வியில் ஆய்வக மற்றும் நடைமுறை வகுப்புகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.



- தற்போதைய மூன்று பாடங்களுக்குப் பதிலாக 5-6 பாடங்களை உள்ளடக்கும் வகையில் உயர் தரக்கல்வியினை விரிவுபடுத்துவதன் மூலம் முன்கூட்டிய நிபுணத்துவம் தவிர்க்கப்படவேண்டும். பாடத்திட்டங்களை பகுத்தறிவு செய்து ஒவ்வொரு பாடத்தையும் அடிப்படை மற்றும் மேம்பட்ட இரண்டு வெவ்வேறு நிலைகளில் வழங்குவதன் மூலம் இதனை அடையமுடியும். நிச்சயமாக இது முழுவதுமாக செய்யப்படவேண்டும். பாடத்திட்டத்தின் அடிப்படைப் பதிப்பு பல தரப்பட்ட மாணவர்களுக்கு அணுகக் கூடியதாக இருக்கும் வகையில் அதாவது சமூக விஞ்ஞான/ உயிரியல் விஞ்ஞான மாணவர்களுக்கான கணிதம் அல்லது விஞ்ஞான மாணவர்களுக்கான கலைப் பாடங்கள் மாணவர்களைப் பல்கலைக்கழகத்தில் சில திட்டங்களைப் பின்பற்றத் தயார்ப்படுத்தும்.
- கணிதத்தில் மாணவர்களின் திறனை மேம்படுத்துதல் மற்றும் அனைத்து மேல் நிலைப்பாடசாலை பாடப்பிரிவுகளுக்கும் குறித்த அளவில் கணிதத்திற்கான அணுகலை வழங்குதல் ஆகியவை தொழில் நுட்ப மற்றும் தகவல் சார்ந்த சமூகத்தில் இன்றியமையாததாக இருக்கும்.
- ஒரு நெறிமுறை மற்றும் உணர்திறன் கொண்ட குடிமகனை உருவாக்க மேல் நிலை மற்றும் பல்கலைக்கழக அளவில் விஞ்ஞானம் தொழில் நுட்பம் மற்றும் பொறியியல் மாணவர்களுக்கு சமூக அறிவியல் மற்றும் மனித நேயப் பாடங்களை அறிமுகம் செய்வது மிகவும் விரும்பத்தக்கதாக இருக்கும்.
- விஞ்ஞான மற்றும் கணித ஆசிரியர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.
- கணிதம் மற்றும் விஞ்ஞான கற்றல் உள்ளடக்கத்தை அணுகுவதற்கு ஆங்கிலத்தைத் தொழில் மொழியாக வழங்குவது அவசியம். ஆனால் அனைத்து பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கும் அவர்களின் கல்வி சர்வதேச தரத்தைப் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்தும் முகமாக ஆங்கில அறிவு முக்கியமானது.
- க.பொ.த உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் அரச பல்கலைக்கழகங்களுக்குள் நுழைவதற்கான காத்திருப்பு நேரத்தைக் குறைப்பது விமர்சன ரீதியாக மீளாய்வு செய்யப்பட வேண்டும். (SLAAS) ஆனது பாடசாலையில் பயிலும் ஆண்டுகளின் எண்ணிக்கையை தற்போதைய 13இல் இருந்து 12ஆக க் குறைக்கும் முன் மொழிவுகளை வலுவாக அங்கீகரிக்கிறது.

இறுதியாக விஞ்ஞான பாடத்திட்டத்தை மாற்றும் தற்போதைய நோக்கத்துடன் இலங்கை சரியான திசையில் கால் தடம் பதித்துள்ளது. இருப்பினும் மாற்றத்திற்கான அங்கீகாரமும் ஆதரவும் சமூகத்தில் உட்பொதிக்கப்பட வேண்டும். மந்த நிலை மற்றும் மாற்றத்திற்கான எதிர்ப்பு ஆகியன பெருந்தடைகளாகத் திகழ்கின்றன. மாணவர் மதிப்பீட்டின் தன்மை பாரம்பரியமாக உள்ள எழுத்துத் தேர்வுகளுக்கு அப்பால் சென்றால் கற்பவர்களை மையமாகக் கொண்ட கல்விக்கு ஆசிரியர்களின் அதிகாரம் வெற்றிக்கான மிக முக்கியமான காரணியாக இருக்கும். (SLAAS) போன்ற விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் முறை அமைப்புகள் பாடசாலைகளில் திட்ட அடிப்படையிலான கற்றலை ஊக்குவிப்பதில் பங்குவகிக்க முடியும். குறுகிய அளவிலான பாடங்களை மனனம் செய்வது அறிவிலும் தொழில் நுட்பத்திலும் அதிவேகமாக வளர்ந்து வரும் எதிர்காலத்திற்கு மாணவர்களை ஒரு போதும் தயார்ப்படுத்தாது.

(முற்றும்)



# 'மாற்குவின் கலை அம்பலம்'



ப.கென்றி ஜெறன்,
நுண்கலைத் துறை,
3ஆம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.







தமிழர்களின் கலைப் பாரம்பரியத்தின் தனித்துவங்களில் ஓவியங்கள் தனிச்சிறப்புடையவை. அப்புஹாமி மாற்குவின் மாணவர்களும், குடும்ப உறுப்பினர்களும், கலை ஆர்வலர்களும் இணைந்து 'மாற்குவின் கலை அம்பலம்' என்ற தலைப்பில் மன்னாரில் காட்சிப்படுத்தலை மார்ச் 13இல் இருந்து மார்ச் 16 வரை ஒழுங்கு செய்திருந்தனர்.

அப்புஹாமி மாற்கு வெவ்வேறு காலகட்டத்தில் வெவ்வேறு பாணிகளிலான நூற்றுக்கணக்கான ஓவியங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட எழுபது ஓவியங்களும், சிற்பங்களும் இதில் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தது.

இக் காண்பியல் காட்சிப்படுத்துகையில் அவரது மெய்யுருக்கள், நாளாந்த வாழ்வியல் விடயங்கள், போர்க் காலங்களில் சந்தித்தவை, கோட்டு ஓவியங்கள், இலகுவில் கிடைக்கக்கூடிய கழிவுப் பொருட்களைக் கொண்டு செய்யப்பட்ட சிற்பங்கள்,ஒட்டுமொத்தமாக அவரின் வாழ்க்கையில் வரையப்பட்ட ஓவியங்கள் தொகுப்பினை காணொளியாகத் தொகுத்தும் இவற்றுடன் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தது.

அவற்றுடன், இவரது மாணவர்களினால் ஓவியர் மாற்கு பற்றிய கருத்தும் பகிர்வும் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் குருநகரில் 1933. 03 29 அன்று பிறந்த இவர். சிறு வயதிலேயே தனது கலைக்கான பயணத்தினை ஓவியம் வரைதல், சிற்பம் செய்தல் போன்றவற்றின் மூலமாக ஆரம்பித்தார். பாடசாலைக் கல்வியைப் புனித சம்பத்திரி கல்லூரியிலும் அதனைத் தொடர்ந்து கொழும்பு நுண்கலை கல்லூரியில் 1953இல் இணைந்து தனது பட்டப் படிப்பினை நிறைவு செய்தார்.

இக்காலப் பகுதியில் டேவிட் பெயிண்டர் உடனான தொடர்பு அவருக்குக் கிட்டியது.1958 தொடக்கம் 1967 வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் எம்.எஸ்.கந்தையாவினால் உருவாக்கப்பட்ட விடுமுறைக்கான ஓவிய குழுவுடன் இணைந்து செயல்பட்டதுடன் ஓவிய ஆசிரியராக ஹாட்லிக் கல்லூரியிலும் பின்னர் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் ஓவிய ஆசிரியராக கடமையை ஆற்றினார்.

1995 காலப்பகுதியில் உள்நாட்டு யுத்தம் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து மாங்குளத்திற்கு பின்னர் 1998இல் மன்னாருக்கும் இடம்பெயர்ந்து தனது ஓவிய உலகின் பயணத்தினை 67ஆவது வயது வரையும் 2000. 09 26 அன்று நிறைவு செய்து கொண்டார்.

நவீன ஈழத்து ஓவிய உலகின் திறவுகோலாகத் திகழ்ந்த ஓவியர் மாற்குவின் வெவ்வேறு காலகட்டங்களில் தம்மால் வரையப்பட்ட சுய பிரதிமைகள் காட்சிப்படுத்தல் பிரதான இடத்தை கொண்டிருந்தது. அவரது இளமைக்கால பருவம் முதல் கொண்டு இறுதிக்கால பிரதிமை ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. இவரது ஆரம்பக் கால ஓவியங்களில் அதிகளவில் உருக்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டதுடன் ஓவியத்தின் கருப்பொருளாக நாளாந்த வாழ்க்கை காட்சிகள்,சமயம் சார்ந்த உள்ளடக்கங்கள், இலக்கியங்கள் என்பனவற்றுடன் மிருகங்கள் பறவைகளைத் தனது ஓவிய மொழியினால் வெளிக் கொண்டுவந்தார்.

காட்சிப்படுத்தலில் போர்க்கால ஓவியங்கள் தாம் வாழ்ந்த 1980 காலப்பகுதியில் போரின் தாக்கங்களை உணர்ச்சிகரமான வெளிப்பாடுகளாகக் கொண்டு வந்துள்ளார். ஒருவகையில், போரினை விமர்சிப்பது, போரின் விடுதலையைப் பற்றிய சிந்தனை, போரின் பாதிப்புகள் விமான குண்டு வீச்சுகள், எறிகணைகளின் கோரங்கள் போன்ற அசாதாரண சூழல்களைத் தனது வலியை கோட்டோ வியங்களுக்கூடாக கொண்டு வந்துள்ளார்.

போர் காலச் சூழலில் தப்பிய சிற்பங்கள். அவரது கலைக்கான உலகில் ஊடகம் என்பது ஒரு தடை எனக்கூற முடியாது. ஏற்பட்ட ஊடக தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யத் தான் வாழ்ந்த சூழலில் இலகுவில் கிடைக்கப்பெற்ற பொருட்களைத் திறம்படக் கைக்கொண்டு படைப்பினை மேற்கொண்டுள்ளார்.

குப்பைகளிலும் தெருக்களிலும் கிடைத்த வெடித்த குண்டுகள், பிளாஸ்டிக் போத்தல்கள், நீர் குழாய்கள், பல வடிவங்களில் கிடைக்கப்பெற்ற மரத்தின் கிளைகள் என்பனவற்றினை தமது உத்தி நுட்பத்தின் மூலம் படைப்பாக மாற்றி உள்ளார். இந்த காட்சிப்படுத்தலில் அவரது வெளிப்பாடுகளுக்கான ஊடகம் பல தரப்பட்டுள்ளது ஆரம்பக் கால ஓவியங்கள் நீர் வர்ணத்தில் கழுவுதல் பாணியிலும் சில ஓவியங்கள் சிக்கனமானதாக வண்ணங்களைப் பயன்படுத்தியும் பிற்பட்ட காலங்களில் நிலவிய ஊடக தட்டுப்பாட்டின் காரணமாகப் பேனா காகிதம் மூலமாகவும் பெட்டி மட்டைகளிலும், அச்சடிக்கப்பட்ட சஞ்சிகை தாள்களையும் ஊடகமாகக் கொண்டு போர்க்கால சூழலில் நிலவிய ஊடக தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதில் வெற்றி கண்டுள்ளார்.

குறிப்பாக சஞ்சிகையின் மேல் வரையப்பட்ட ஓவியங்கள் அவற்றில் உள்ள வர்ணங்களினை அடிப்படையாகக் கொண்டு தமக்கான உருவங்களினை வேறொரு வர்ணத்தின் மூலம் வெளிக்கொண்டு வந்துள்ளார். ஓவியரின் நவீன ஓவியப் பாணி மேற்குலக நாடுகளில் தோன்றிய நிறவாதம், வெளிப்பாட்டு வாதம், கனவடிவ வாதம், குறியீட்டு வாதம் போன்ற நவீன ஓவிய பாணிகளின் ஒட்டுமொத்த ஊடுறுப்புகளினை படைப்புகளுக்கான தமது சூழலுடன் தொடர்புடைய கருப்பொருளுடன் வெளிப்படுத்தி உள்ளார். காட்சிப்படுத்தலின் தொகுதியில் இறுதியாக ஒழுங்கமைக்கப்பட்ட காணொலியில் ஓவியரின் ஆரம்பகால படைப்புத் தொடக்கம் இறுதிக்கால படைப்புகள் வரை காலக்கிரமமாகவும் நேர்த்தியாகவும் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. இவற்றுடன் அவரின் வாழ் நாள் காலங்களில் வழங்கப்பட்ட நேர்காணல்கள்; ஓவியத்தின் மூலமாகக் கொண்டு வந்த இசை ராகங்களை உள்ளடக்கிய ஓவியங்களை இணைத்து காணொளி தயாரிக்கப்பட்டிருந்தது.

காட்சிப்படுத்தலை மேலும் வலு சேர்க்கும் விதத்தில் அவரிடம் ஓவியக் கல்வியைப் பயின்ற மாணவர்களின் கருத்துப் பகிர்வில் அருந்ததி இராட்டினம், வாசுகி ஜெய்சங்கர், பெப்சி மரியதாஸ், செந்தில்குமரன், மைக்கல் இவர்களுடன் இணைந்து அ.ஜேசுதாஸ் ஆகியோரினால் ஓவியர் மாற்கு பற்றிய கருத்து பகிர்வில் 1980, 1990 காலப்பகுதியில் ஓவியக்கலையை அடுத்த சந்ததிக்கு வழங்குவதில் உள்ள ஆர்வம், கிடைக்கப்பெற்ற ஊடகத்தினை கொண்டு அன்றாடம் எதிர் கொண்ட விஷயங்களை வரைவதில் காட்டிய முனைப்பு திட்டவட்டமாக வெளிப்பட்டது. அக்கால கட்டத்தில் ஓவியத் துறை சாராத மாணவர்கள், பல்கலைக்கழகங்களில் கல்வி கற்ற மாணவர்கள் இவரினை ஆசானாகக் கொண்டு ஓவியம் பயின்றுள்ளனர். இவரின் வீடு ஒரு ஓவியக் கூடத்தைப் போல, மாணவர்களினால் நிறைந்திருக்கக் கூடும் என்பது அவர்களின் உரையின் மூலம் ஊகிக்க முடிகிறது.

இக் காட்சிப்படுத்தல் ஓவியரின் கடினமான வேலைகளையும், ஓவியராகத் தான் கண்ட தனது சிந்தனைக்கு எட்டிய அவற்றினை தனக்கேயுரித்தான ஓவிய மொழியில் வெளிப்படுத்தியுள்ளார். அவரின் வாழ்க்கைக் காலத்தில் உள்ளிருந்து வெளியேயும் வெளியே இருந்து உள்ளேயுமான கலை உலகின் தொடர்பு அறுபட்ட நிலையில், இந்த காட்சிப்படுத்தல் சூழல் "நான் என்றும் எனது மாணவர்களினால் வாழ்வேன்" என்ற சொல்லுக்கேற்ப அவருடைய ஓவியங்கள் இன்று வாழும் சமூகத்தில் நாடுகள் பல கடந்து வாழ்கின்றன. ஆசிரியர்களின் பங்கு என்பது ஓவியங்களின் வாழ்தலுக்கான வழியாக நான் உணர்கின்றேன்.









# “விலை கொடுத்து வாங்க முடியாது”

ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 20ஆம் திகதி உலக மகிழ்ச்சி தினம் கொண்டாடப்படுகிறது. அது இளவேனிற்காலத்தின், அதாவது, வசந்த காலத்தின் துவக்க நாள். அந்த நாளில் பகலும் இரவும் சரிசமமாக இருக்கும். இதனால்தான் இந்த நாளை, உலகின் மகிழ்ச்சி தினமாகச் சிறப்பிக்கத் தேர்ந்தெடுத்திருக்கிறது ஐ.நா. நிறுவனம். மகிழ்ச்சி என்பது ஓர் உணர்ச்சி, அதனை யாராலும் விலை கொடுத்து வாங்க முடியாது. நமது ஒவ்வொரு செயலும் மகிழ்ச்சியை நோக்கித்தான் இருக்கிறது.

மகிழ்ச்சியாக வாழ்வது, மனித உரிமைகளில் ஒன்று. இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தில், ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் பொதுச் சபை, 2012ஆம் ஆண்டு ஜூலை மாதம், உலக மகிழ்ச்சி நாளை உருவாக்கியது. அந்த அவையின் அறிவிப்பின்படி, ஒவ்வோர் ஆண்டும், மார்ச் 20ஆம் திகதி, ஒவ்வொரு தலைப்பில், உலக மகிழ்ச்சி நாள் கடைப்பிடிக்கப்படுகின்றது.

மகிழ்ச்சி எது எனக் கேட்டால் ஒவ்வொரு மனிதரும் ஒவ்வோர் அர்த்தத்தைக் கூறுவர். போர் மற்றும் வறுமையை உலகளவில் முடிவுக்குக் கொண்டுவருவதே மகிழ்ச்சி என ஐ.நா. நிறுவனம் கருதுகிறது. மகிழ்ச்சியே மனிதனின் அடிப்படை இலட்சியம் என்கிற அடிப்படையில் ஐ.நா. சபை மார்ச் 20ஆம் திகதியை அனைத்துலக மகிழ்ச்சி தினமாக அறிவித்துள்ளது.

மகிழ்ச்சி என்பது ஓர் உணர்ச்சி, அதனை யாராலும் விலை கொடுத்து வாங்க முடியாது. நமது ஒவ்வொரு செயலும் மகிழ்ச்சியை நோக்கித்தான் இருக்கிறது. மகிழ்ச்சி எல்லாவித மாற்றங்களையும் கொண்டு வரக்கூடியதாகும். எப்போதும் வாழ்வில் மகிழ்ச்சியாக இருப்பது நமது ஆயுளைக் கூட்டும் என்பது நாம் அறிந்ததே.

பொதுவாகவே மகிழ்ச்சிக்கும், சிரிப்பிற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. மகிழ்ச்சியின் அடிப்படையாக உணரப்படுவது சிரிப்பு. எனவே சிரிப்பதன் மூலம் மகிழ்ச்சியைத் தூண்ட முடியும். சிரிப்பு ஆரோக்கியம் தருவதாக, தற்போதைய மருத்துவ கண்டுபிடிப்புகள் கூறுகின்றன. மனநிலையை மகிழ்ச்சியாகப் பராமரிப்பதன் வழியாக, சிரிப்பையும், ஆரோக்கியத்தையும் வாழ்வில் தக்க வைக்க முடியும். நம்மால் முடித்த அளவு பிறருக்கு உதவி செய்வதன் வழியாக மகிழ்ச்சியைப் பெறவும் முடியும், பிறருக்குத் தரவும் முடியும்.



மகிழ்ச்சி, மனிதராகப் பிறந்த அனைவருக்கும் பொதுவான ஓர் உணர்வு. ஒரு மனிதனின் மகிழ்ச்சி என்பது அவரை மட்டுமல்ல, அவரைச் சுற்றி உள்ளவர்களின் மனநிலையையும் மாற்றி வாழ்க்கையை இனிமையாக்கும்.

புகார் சொல்லும் பழக்கத்தைத் தவிர்த்து, வாழ்க்கையில் நன்றியுணர்வோடு இருப்பவர்கள், மன அமைதியோடு, மகிழ்ச்சியாக இருக்கின்றனர். நாம் சரியானதொரு வாழ்க்கையை வாழ்கிறோம் என்பதை நிரூபிப்பது, அந்த வாழ்க்கை வெளிப்படுத்தும் மகிழ்ச்சியில் அடங்கியுள்ளது.

2012 ஏப்ரலில் பூட்டானின் மன்னராட்சி அரசு, உலகெங்கிலும் உள்ள பிரதிநிதிகளின் கூட்டத்தைக் கூட்டியது. அதில் மக்களின் மகிழ்ச்சி மற்றும் நல்வாழ்வை ஒரு பொருளாதார அம்சம் போலப் பார்க்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. 2013ஆம் ஆண்டு இந்த நாள் முதன்முதலில் ஐக்கிய நாடுகள் சபையால் தொடங்கப்பட்டது. தேசத்தில் மகிழ்ச்சியின் முக்கியத்துவத்தை நம்பிய பூட்டானால் முதலில் வலியுறுத்தப்பட்ட ஒரு முன்முயற்சியாகும் இது. முதல் அனைத்துலக மகிழ்ச்சி தினம் 2013ம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி கொண்டாடப்பட்டது.

சமூகப் பாதுகாப்பு, வருமானம், நல ஆதரவு, சுதந்திரம், தாராள மனப்பான்மை, ஊழல் இல்லாமை, மக்களின் சராசரி வாழ்க்கை மதிப்பீடுகள் கருத்தில் கொண்டு இந்தப் பட்டியலை உருவாக்கியுள்ளனர்.

ஒவ்வொரு நாட்டிலிருந்தும் ஒன்று முதல் மூவாயிரம் பேர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அது அதன் மாதிரி அளவு ஆகும். இவர்களிடம் சில கேள்விகள் கேட்கப்படுகின்றன. இந்த கேள்விகளுக்கான பதில்களின் அடிப்படையில், பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

தொழிலைப் போலவே, மதத்தைப் பின்பற்றும் சுதந்திரம், விருப்பமான உணவை உண்ணும் சுதந்திரம், விருப்பமான ஆடைகளைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் போன்றவை தவிர, கடந்த ஒரு மாதத்தில் ஏதாவது தொண்டு நிறுவனத்திற்குப் பணம் கொடுத்தீர்களா என்ற கேள்வியும் கேட்கப்படுகிறது.

வாழ்க்கையில் மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருக்கும் ஒருவர் மற்றவர்களுக்கு உதவவும், தானம் செய்யவும் முன்வருவார் என்று நம்பப்படுகிறது. ஊழல் தொடர்பான கேள்வியும் இருக்கும். ஏனெனில், நாட்டில் ஊழல் இல்லாதது செழிப்பைக் குறிக்கிறது என்று நம்பப்படுகிறது. இது போன்ற பல கேள்விகளைக் கேட்டு, இந்த ஆய்வில் இருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந்த அறிக்கையில் தரவரிசை தீர்மானிக்கப்படுகிறது.



**நாம் வாழும் நாட்டை மகிழ்ச்சியான நாடாக மாற்றி, மேலும் முன்னோக்கி நகர்த்திச் செல்வதில் அரசுக்கு எந்தளவுக்கு பங்கு இருக்கிறதோ, அதேயளவுக்கு தனிநபர் ஒவ்வொருவருக்கும் உண்டு. மகிழ்ச்சியோடு வாழவும் பிறரை மகிழ்ச்சிப்படுத்தவும் உறுதியெடுப்போம்**

வீட்டுக்குள் முடங்கிக் கிடப்பதை விட வெளியே செல்வதால் சுற்றுச் சூழலில் இயல்பாகவே உள்ள இதமான காற்று, சந்தோசமாக இருக்கும் நபர்களின் சந்திப்பு என பல நல்ல விடயங்கள் நமக்குக் கிடைக்கும். உடற்பயிற்சி மேற்கொள்வது, அந்த நாள் முழுதும் சக்தியும், உற்சாகமும் மிக்க நபராகச் செயற்படவும் நேர்மறையாக சிந்திக்கவும் உதவும். தேவைக்கு ஏற்ற உறக்கம் முக்கியம். நம்மில் பலர் அதிகமாக வேலை செய்து குறைவான நேரமே தூங்குவதால் அவர்களுக்கு அதிகபட்ச அழுத்தமும், எதிர்மறை சிந்தனையும் ஏற்படுவதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

மனதை இலகுவாக வைத்துக் கொள்ளுங்கள். எதுவும் பாதிக்க விடாதீர்கள். மோசமான அனுபவங்களை மனதில் இருந்து விலக்கி வையுங்கள். மனதைத் திசை திருப்பும் பயிற்சிகளால் மகிழ்ச்சியை மனதிற்குள் கொண்டு வரப் பழகுங்கள். பிரச்சினைகளை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளப் பயிற்சி எடுங்கள்.

கோபம் மனிதனுக்கு எதிரி. தைரியம் இல்லாதவர், தாழ்வு மனப்பான்மை கொண்டவர், தவறுகள் செய்பவர், மனோதிடம் அற்றவர்தான் தங்கள் குறைகளை மறைத்து தங்களை காத்துக் கொள்ளவே கோபம் என்ற ஆயுதத்தை கையில் எடுப்பார்கள். ஆகவே கோபத்திலிருந்து விடுதலைப் பெறுங்கள். அன்பு, பாசம், நட்பு இவைகளுக்கு மட்டுமே தலை வணங்குங்கள். உங்கள் மனசாட்சி சொல்படி கேளுங்கள் மனசாட்சிக்கு பயந்து நடக்கக் கற்றுக் கொள்ளுங்கள். பேசும்போது அடுத்தவர் கண்களைப் பார்த்து பேச கற்றுக் கொள்ளுங்கள். தயவுசெய்து அலைபேசியை தேவையான விஷயத்துக்கு மட்டும் உபயோகியுங்கள்.

செலவைவிட சேமிப்பை அதிகமாக்குங்கள். நீங்கள் சந்திக்கும் நபர்களை எப்போதும் சிரித்த முகத்துடன் அணுகுங்கள். சின்ன புன்னகை எல்லாவற்றையும் மாற்றும். யார் என தெரியாத நபராக இருந்தாலும் கனிவுடன் உதவுங்கள். சின்ன உதவி கூட மகிழ்ச்சியை உருவாக்கும்.

வாழ்வின் போக்கிலேயே வரும் மகிழ்ச்சியை விடாமல் பிடித்தால் அது உன்னதமே.

குழந்தைகளைப் பாருங்கள். எந்தக் கவலையும் இன்றி மகிழ்வுடன் அவர்கள் உலகத்தில் விளையாடுவார்கள். நாமும் குழந்தைகளோடு குழந்தையாக விளையாடி குதூகலிக்கும்போது நம்மையறியாமல் நம் மனம் மகிழ்ச்சியில் ஆழ்ந்து புது உற்சாகத்தை தரும். யாராலும் நமக்குள் மகிழ்ச்சியை விதைக்க முடியாது.

நாம் மட்டுமே நம் உணர்வுகளுக்கு பொறுப்பாக முடியும். மகிழ்ச்சியாக இருப்பது என்பது மனிதனின் அடிப்படை உரிமை. மகிழ்ச்சியாக இருக்கும் மனிதன் அதிக ஆயுளைக் கொண்டுள்ளான் என்கின்றனர் அறிவியலாளர்கள். நாம் பிறந்த மண்ணை, நாம் வாழும் நாட்டை மகிழ்ச்சியான நாடாக மாற்றி, மேலும் முன்னோக்கி நகர்த்திச் செல்வதில் அரசுக்கு எந்தளவுக்கு பங்கு இருக்கிறதோ, அதேயளவுக்கு தனிநபர் ஒவ்வொருவருக்கும் உண்டு. மகிழ்ச்சியோடு வாழவும் பிறரை மகிழ்ச்சிப்படுத்தவும் உறுதியெடுப்போம்.





# “புன்னகையை மேம்படுத்துங்கள்”

வாய்வழி ஆரோக்கியம் என்பது உங்கள் ஒட்டுமொத்த ஆரோக்கியத்துடன் தொடர்புடைய சிக்கலான அமைப்பு ஆகும். எனவே, அது பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதற்காக ஒவ்வொரு ஆண்டும், மார்ச் 20ஆம் திகதி உலக வாய்வழி சுகாதார தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இம்முறை ‘மகிழ்ச்சியான வாய் என்றால் மகிழ்ச்சியான மனம். என்பதே தொனிப்பொருளாகும்.

உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, உலகளாவிய நோய் பற்களில் சிகிச்சை அளிக்கப்படாததால் பல் சிதைவு ஏற்படுவது என்பது மிகவும் பொதுவான சுகாதார நிலை எனப்படுகிறது.

தினமும் பல் துலக்குதல் மற்றும் வாய்வழி சுகாதாரத்தைப் பராமரிப்பது பல் சொத்தை மற்றும் ஈறு நோய்களைத் தடுப்பதற்கு மட்டுமல்ல, இதய நோய் மற்றும் நீரிழிவு போன்ற நாட்பட்ட நிலைமைகளின் அபாயத்தைக் குறைப்பதற்கும் முக்கியமானது.

வாய்வழி ஆரோக்கியம் ஒட்டுமொத்த நல்வாழ்வுக்குப் பங்களிக்கிறது என்பதுதான், உண்மை. மேலும் நல்ல ஆரோக்கியத்தை நோக்கிய பயணம் சுத்தமான வாயிலிருந்து தொடங்குகிறது. மேலும் பல் ஆரோக்கியம் தலை மற்றும் கழுத்தில் உண்டாகும் புற்றுநோயைக் குறைக்கும் என ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

மிகவும் தடுக்கக்கூடிய வாய்வழி நோய்கள் உலகெங்கிலும் 3.5 பில்லியன் மக்களைப் பாதிக்கின்றன என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. அவை பல் வலி, அசௌகரியம், பல் சிதைவு மற்றும் மரணத்திற்குக் கூட வழிவகுக்கின்றன.

உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, நிரந்தரப் பற்களில் சிகிச்சையளிக்கப்படாத பல் சொத்தை (பல் சிதைவு) உலகளாவிய நோய் சுமை மிகவும் பொதுவான சுகாதார நிலை ஆகும்.

சர்க்கரைப் பொருட்களை அதிகமாக உண்பது, புகையிலையை அதிகமாக எடுத்துக்கொள்வது, மது அதிகம் குடிப்பது மற்றும் வாயைச் சுகாதாரம் இல்லாமல் பார்த்துக்கொள்வது ஆகியவை, மோசமான பல் ஆரோக்கியத்திற்குக் காரணங்களாகும்.

## உலக வாய்வழி சுகாதார தினம்:

ஒவ்வொரு, ஆண்டும் மார்ச் 20ஆம் திகதி உலக வாய்வழி சுகாதார தினம் அனுசரிக்கப்படுகிறது. இது வாய்வழி ஆரோக்கியம் மற்றும் ஒட்டுமொத்த ஆரோக்கியத்துடன் தொடர்புடைய சிக்கலான அமைப்பினை, விழிப்புணர்வினைச் சொல்லிக் கொடுக்கிறது.

## உலக வாய்வழி சுகாதார தினத்தின் வரலாறு:

உலக வாய்வழி சுகாதார தினம் முதன்முதலில் 2007 செப்டெம்பர் 12ஆம் திகதி அந்நிய நேரடி முதலீட்டு நிறுவனர் டாக்டர் சார்லஸ் கோடனின் பிறந்த நாளில் கொண்டாடப்பட்டது.

வாய்வழி சுகாதாரம் மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்துவம் குறித்த உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ‘அந்நிய நேரடி முதலீட்டு உலக பல் கூட்டமைப்பு’ இதை ஏற்பாடு செய்தது.

இருப்பினும், 2013ஆம் ஆண்டில், மற்ற முக்கிய நாட்களுடன் இருக்கும் மோதலைத் தவிர்ப்பதற்காகவும், சர்வதேச நாட்காட்டியுடன் வழிகாட்டுதலின்படி, உலக வாய்வழி சுகாதார தேதியை மார்ச் 20க்கு மாற்ற’ அந்நிய நேரடி முதலீட்டு உலக பல் கூட்டமைப்பு’ முடிவு செய்தது. அதனைத் தொடர்ந்து,கடந்த பத்தாண்டுகளாக, வாய்வழி சுகாதார கல்வி, வாய்வழி நோய்த் தடுப்பு ஆகியவற்றை உலகளவில் மேம்படுத்துவதற்காக மார்ச் 20 அன்று, இந்த நாள் கொண்டாடப்படுகிறது.



## உலக வாய் சுகாதார தினத்தின் முக்கியத்துவம்:

வாய் நோய்கள் எளிதில் தவிர்க்கப்படக்கூடியவை. ஆனால், சரியான விழிப்புணர்வு இல்லாததால் பல் சொத்தை, ஈறு நோய், எடென்டுலிசம் எனப்படும் மொத்த பல் இழப்பு, வாய் புற்றுநோய், அதிர்வுறும் பல், நோமா போன்ற பல்வேறு வகையான பல் பிரச்சினைகளால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

பொதுவான ஆபத்து காரணிகளை நிவர்த்தி செய்வதன் மூலமும் விழிப்புணர்வைப் பரப்புவதன் மூலமும் வாய்வழி நோய்களைக் குறைக்க முடியும்.

புகையிலைப் பயன்பாட்டை நிறுத்துவது,

மது குடிப்பதைக் குறைப்பது, இனிப்புப் பலகாரங்களை அதிகம் உண்பதைத் தவிர்ப்பது மற்றும் சீரான உணவை உட்கொள்வது

ஆகியவை, இந்த சிக்கல்களில் பலவற்றைத் தடுக்க உதவுகிறது.

ஒரு நாளைக்கு இரண்டு முறை பல் துலக்குவதும் பல்லின் ஆரோக்கியத்திற்கு மிகவும் உதவக் கூடியது. பல்லில் வலி ஏற்பட்டாலோ, ஈறுகளில் வலி உண்டானாலோ, அதன் ஆரம்பக் கட்டங்களில் இந்தப் பிரச்சினைகளுக்கு சிகிச்சையளிப்பது தனி நபர்கள் சிறந்த வாழ்க்கையை வாழ உதவும்.

வாய்வழி நோய்கள் ஏற்படும். இது ஒட்டுமொத்த உடல் நலத்தையும் பாதிக்கலாம். உலகளவில் கிட்டத்தட்ட 3.5 பில்லியன் மக்களுக்கு வாய் நோய்கள் பாதிப்பு ஏற்படுத்துகிறது.

உணவு பிறகு வாய் கொப்பளிக்க வேண்டும் உள்ளிட்ட பொதுவான நடைமுறைகளைப் பின்பற்றினால் பற்கள் மற்றும் ஈறுகள் ஆரோக்கியமாக இருக்கும்.

## வாய் நோய்கள் என்னென்ன:

- பல் சொத்தை
- ஈறு நோய்கள்
- பல் அமைப்பு குறைபாடு
- பல் புளோரோசிஸ்
- பல் எலும்பு முறிவு
- வாய் புற்றுநோய்
- தாடை மூட்டு
- எலும்பு நோய்கள்
- வாய் புண்கள்

## வாய் நோய்களில் இருந்து பாதுகாக்கும் வழிமுறைகள்:

- தினம் காலை மற்றும் இரவு பல் துலக்க வேண்டும்.
- நாக்கை தவறாமல் சுத்தம் செய்ய வேண்டும்.
- ஒவ்வொரு உணவு மற்றும் சிற்றுண்டிக்குப் பிறகும் வாய் கொப்பளிக்க வேண்டும்.
- ஒட்டும் உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.
- போதுமான அளவு நார்ச்சத்துள்ள உணவுகளை உண்ண வேண்டும்.
- நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும்.
- சர்க்கரை மற்றும் அமில பானங்கள் தவிர்க்க வேண்டும்.
- ஆறு மாதங்களுக்கு ஒரு முறை பல் மருத்துவரை சந்திக்க வேண்டும்.



அமெரிக்கா

60 ஆயிரம் இராணுவ ஊழியர்கள்

# திடீர் பணி நீக்கம்



அரசாங்கத்தின் செலவைக் குறைக்கும் வகையில் அரசுத்துறைகளில் பணியாளர்கள் குறைப்பு நடவடிக்கையில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஈடுபட்டு வருகிறார்.

உலகின் சக்தி வாய்ந்த இராணுவத்தைக் கொண்ட அமெரிக்காவின் இராணுவ தலைமை கட்டிடமாக பென்டகன் உள்ளது. இந்த இராணுவ தலைமையிடத்தில் சுமார் 1 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இந்நிலையில், பென்டகனில் பணிபுரியும் 60 ஆயிரம் இராணுவ ஊழியர்களை பணிநீக்கம் செய்வதாக, ட்ரம்ப் நிர்வாகம் அறிவித்துள்ளது. மேலும், தாமாக முன்வந்து பணியில் இருந்து விலகினால் பல்வேறு சலுகைகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் 20 ஆயிரம் பேர் தங்களுடைய இராஜினாமா கடிதத்தைக் கொடுத்துள்ளனர்.

இத்தாலி

அகதிகள் படகு விபத்து:

## அறுவர் பலி; 40 பேர் மாயம்

இத்தாலியில், அகதிகள் படகு ஒன்று கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தைத் தேடி ஆபிரிக்கா, எகிப்து, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா உள்பட பல்வேறு நாடுகளை சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் சட்டவிரோதமாக கடல் வழியாக ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழையும் ஆபத்தான பயணம் மேற்கொள்கின்றனர்.


இந்நிலையில், வடக்கு ஆப்பிரிக்காவை அமைந்துள்ள துனிசியாவில் இருந்து 60க்கும் மேற்பட்ட அகதிகள் ஐரோப்பிய நாடான இத்தாலிக்குள் சட்டவிரோதமாக நுழைய முயற்சித்தனர். இதற்காகப் படகு மூலம் மத்திய தரைக்கடல் வழியாக அகதிகள் பயணித்துள்ளனர்.

அப்போது எதிர்பாராத விதமாக கப்பல் கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் படகில் பயணித்த அனைவரும் கடலில் விழுந்து தத்தளித்துள்ளனர்.

இந்த விபத்து குறித்து அறிந்த இத்தாலி கடலோர காவல்படையினர் விரைந்து சென்று கடலில் தத்தளித்த 4 பெண்கள் உட்பட 10 பேரை உயிருடன் மீட்டு லம்பெடுசு தீவுக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

ஆனாலும், இந்த சம்பவத்தில் நீரி மூழ்கி 6 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 40க்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். அவர்களை தேடும் பணி நடைபெற்று வருகிறது.






மலேசியா

காணாமல் போன மலேசிய விமானத்தை

## தேடும் பணி ஆரம்பம்

கடந்த 11 ஆண்டுகளுக்கு முன் காணாமற்போன எம்.எச்.370 விமானத்தின் பாகங்களைத் தேடும் நடவடிக்கையைத் தொடர்வதற்கு, மலேசிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

கோலாலம்பூரில் இருந்து சீன தலைநகரான பெய்ஜிங்குக்கு 2014 மார்ச் 8ஆம் திகதியன்று, 227 பயணிகள், 12 விமானப் பணியாளர்களுடன் புறப்பட்ட 777 வடிவமைப்பு கொண்ட எம்.எச்.370 மலேசிய எயார்லைன்ஸ் விமானம், புறப்பட்ட ஒரு மணி நேரத்துக்குப் பிறகு வியட்நாம் வான் பரப்பை நெருங்கிக் கொண்டிருந்தபோது திடீரென கட்டுப்பாட்டு அறையுடன் விமானத்துக்கு இருந்த அனைத்து தொடர்புகளும் செயலிழந்தன.

கடந்த 11 ஆண்டுகளில் இரு முறை தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் அவை பெரிய அளவில் பயனளிக்காமல் தோல்வியிலேயே முடிந்துள்ளன.

இந்நிலையில், 11 ஆண்டுகளுக்கு முன் காணாமற்போன எம்.எச்.370 விமானத்தின் பாகங்களைத் தேடும் நடவடிக்கையைத் தொடர மலேசிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த முறை இந்தியப் பெருங்கடலின் தென்பகுதியில் 15 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் தேடுதல் பணி மேற்கொள்ளப்படும். அதற்காக பிரிட்டனில் செயற்படும் ஓஷன் இன்பினிடி நிறுவனத்துடன் மலேசியா ஒப்பந்தம் செய்துள்ளது.

விமானத்தின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டால் மட்டுமே மலேசிய அரசாங்கம் அந்நிறுவனத்துக்குக் கட்டணம் செலுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப்

## அரியானா–பஞ்சாப் எல்லையில் பதற்றம்

போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளை அகற்றிய நிலையில், அரியானா மற்றும் பஞ்சாப்பை ஒட்டிய ஷம்பு எல்லைப் பகுதியில், வியாழக்கிழமை (20) பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அரியானா மற்றும் பஞ்சாபை ஒட்டிய ஷம்பு எல்லை பகுதியில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு இருந்தனர்.

இந்நிலையில், பஞ்ப்சாப் பொலிஸார், புதன்கிழமை(19) மாலை, அந்த பகுதிக்குச் சென்று போக்குவரத்துக்குத் தடையாக இருந்த தடுப்பான்களை அகற்றினர். புல்டோசர்களை கொண்டும் அவற்றை இடித்துத் தள்ளினர்.

அவற்றுடன் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளையும் அகற்றினர்.




எனினும், இதற்கு விவசாயிகள் ஒத்துழைப்பு கொடுத்தனர் என்றும் அவர்களைக் கட்டாயப்படுத்தி அகற்றவில்லை என பாட்டியாலா சிறப்பு பொலிஸ் அதிகாரி நானக் சிங் கூறினார்.

இதனால், நெடுஞ்சாலை மீண்டும் போக்குவரத்துக்குத் தயார் செய்யப்பட்டு உள்ளது.

அதேவேளையில், காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு உள்ள முக்கிய விவசாய தலைவர்களான ஜெகஜீத் சிங் தல்லேவால், சர்வன் சிங் பாந்தர் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர்.

பஞ்சாப்பில் ஆளும் ஆம் ஆத்மி தலைமையிலான அரசின் இந்த முடிவுக்கு விவசாயச் சங்கத் தலைவர்களில் ஒருவரான ராகேஷ் திகாயத் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். அனைத்து அமைப்புகளும் போராட்டத்திற்குத் தயாராக உள்ளன என கூறியுள்ளார். இதனால், எல்லையில் பரபரப்பு ஏற்பட்டு உள்ளது.

இதனைத் தொடர்ந்து ஷம்பு எல்லையில், வியாழக்கிழமை (20) காலை அதிக அளவில் பொலிஸார் குவிக்கப்பட்டு, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மராட்டியம்

குர்ஆன் எரிக்கப்பட்ட விவகாரம்:

## ட்ரோன்கள் பறக்க தடை

குர்ஆன் புத்தகம் எரிக்கப்பட்டதாக வதந்தி பரவியதால் ஏற்பட்ட வன்முறையைத் தொடர்ந்து, அவுரங்கசீப்பின் கல்லறை அமைந்துள்ள சத்ரபதி சம்பாஜி நகர் மாவட்டத்தில் உள்ள குல்தாபாத்தில் ட்ரோன்கள் பறக்க தடை செய்யப்பட்டுள்ளது

மராட்டியத்தில் உள்ள சத்ரபதி சம்பாஜி நகரில் முகலாய மன்னர் அவுரங்கசீப் கல்லறை உள்ளது. இந்த கல்லறையை அகற்றக்கோரிக் கடந்த திங்கட்கிழமை இந்து அமைப்புகள் போராட்டம் நடத்தின. இதில் நாக்பூரில் நடந்த போராட்டத்தில்



இஸ்லாமியர்களின் புனித நூலான குர்ஆன் எரிக்கப்பட்டதாக வதந்தி பரவியது.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து அன்று இரவு நாக்பூரில் பல்வேறு இடங்களில் வன்முறை வெடித்தது. குறிப்பாக மகால், ஹன்சாபுரி பகுதிகளில் போராட்டக்காரர்கள் பல வாகனங்களைத் தீவைத்து எரித்தனர். இதில், 42 வாகனங்கள் தீயில் எரிந்து நாசமாகின. கல்வீசித் தாக்குதல் நடத்திய சம்பவத்தில் 35 பொலிஸார் காயமடைந்தனர்.

ஐ.பி.எல்:

# ராஜஸ்தானின் அணித்தலைவர் ரியான் பராக்

இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) 2025ஆம் ஆண்டு பருவகாலத்தின் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் முதல் மூன்று போட்டிகளுக்கும் ரியான் பராக் தலைமை தாங்கவுள்ளார்.

விரல் காயமொன்றிலிருந்து வழமையான அணித்தலைவர் சஞ்சு சாம்சன் குணமடைந்து வருகையிலேயே ராஜஸ்தானுக்கு பராக் தலைமை தாங்கவுள்ளார்.

விக்கெட் காப்பு மற்றும் களத்தடுப்பில் ஈடுபடுவதற்கான அனுமதி சாம்சனுக்கு கிடைக்கும் வரையில் துடுப்பாட்டவீரராக மாத்திரம் செயற்படவுள்ளார்.

அந்தவகையில் தாக்கம் செலுத்தும் வீரராகவே சாம்சன் களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

சாம்சன் இல்லாத நிலையில் துருவ் ஜுரேல் விக்கெட் காப்பில் ஈடுபடுவாரெனத் தெரிகிறது.






மீண்டும் சோதனை செய்யப்பட்டமையையடுத்து

## ஷகிப்பின் பந்துவீச்சுப் பாணி சரியாகியது

சந்தேகத்துக்குரிய பந்துவீச்சுப் பாணியிலிருந்து பங்களாதேஷின் முன்னாள் அணித்தலைவர் ஷகிப் அல் ஹஸன் விடுவிக்கப்பட்டுள்ளார்.

முதலிரண்டு தடவைகள் சோதனையில் 37 வயதான ஷகிப் தோல்வியடைந்தபோதும் புதிய சோதனையின்போது தனது பந்துவீச்சுப்பாணி சரியானதென நிரூபித்துள்ளார்.



உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளுக்கான

## ஆர்ஜென்டீனக் குழாமில் மார்டினெஸும் இல்லை

உருகுவே, பிரேஸிலுக்கெதிரான 2026 சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளன உலகக் கிண்ணத் தொடருக்கான தென்னமெரிக்க கால்பந்தாட்டச் சம்மேளன தகுதிகாண் போட்டிகளை கெண்டைக்கால் பின்தசை காயம் காரணமாக ஆர்ஜென்டீனாவின் முன்களவீரர் லொட்டரோ மார்டினெஸ் தவறவிடவுள்ளதாக ஆர்ஜென்டீனா கால்பந்தாட்டச் சங்கம் புதன்கிழமை (19) தெரிவித்துள்ளது.

அணித்தலைவர் லியனல் மெஸ்ஸி, போலோ டிபாலா, ஜியோவனி லோ செல்ஸோ ஆகியோருடம் மார்டினெஸுடன் காயம் காரணமாக இப்போட்டிகளைத் தவறவிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதுவரையில் நடைபெற்ற 12 தகுதிகாண் போட்டிகள் முடிவில் 25 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் வரிசையில் ஆர்ஜென்டீனா உள்ளது.




ஐ.பி.எல்:

## 18ஆவது முறையில் வெற்றியடையுமா பெங்களூரு?

உலக கிரிக்கெட்டின் மிகப் பெரிய நட்சத்திரமான விராட் கோலியைக் கொண்டிருந்தும் இந்தியன் பிறீமியர் லீக்கை (ஐ.பி.எல்) இதுவரையில் கைப்பற்றியிருக்காத றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு, லியனல் மெஸ்ஸி அறிமுகமாகி 17 ஆண்டுகளின் பின்னர் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியபோது கோலியின் சீருடை இலக்கமானது 18ஆவது ஆண்டில் கிண்ணத்தைக் கைப்பற்றும் நோக்கில் களமிறங்குகின்றது.

கடந்த முறை தகுதிகாண் போட்டிகளுக்குத் தகுதி பெற்றிருந்த பெங்களூரு அணித்தலைவர் பப் டு பிளெஸி மற்றும் மொஹமட் சிராஜ், கமரன் கிறீன், வில் ஜக்ஸ், கிளென் மக்ஸ்வெல், ஆகாஷ் டீப், லொக்கி பெர்கியூசன், அல்ஸாரி ஜோசப், றீஸ் டொப்லி, கரண் ஷர்மா ஆகியோரை விடுவித்ததுடன் தினேஷ் கார்த்திக் ஓய்வு பெற்றிருந்தார்.

ரஜாட் பட்டிடாரை அணித்தலைவராக்கியிருக்கிற பெங்களூரு, பில் ஸோல்ட், தேவ்டுட் படிக்கல், ஜிதேஷ் ஷர்மா, ஜேக்கப் பெத்தெல், லியம் லிவிங்ஸ்டோன், றொமாரியோ ஷெப்பர்ட், குருனால் பாண்டியா, ஜொஷ் ஹேசில்வூட், புவ்னேஷ்வர் குமார், ரசில் சலாம், சுயாஷ் ஷர்மா என தகுந்த பிரதியீடுகளையும் ஏலத்தில் கொண்டிருக்கிறது.

பெங்களூரு மைதானத்தில் ஓட்டங்களைக் கட்டுப்படுத்துவதே சிக்கலாக இருக்கின்ற நிலையில் புவ்னேஷ்வர் குமார், ரசிக் சலாம், சுயஷ் ஷர்மா, ஜொஷ் ஹேசில்வூட், குருனால் பாண்டியா ஆகியோர் அப்பணியை ஆற்றக்கூடியவர்களாக இருக்கின்றனர்.

தவிர ஆரம்பத்தில் கோலியுடன் அதிரடியாக ஆட பில் ஸோல்டும் அதைத் தக்க வைக்க ஜிதேஷ் ஷர்மா, லிவிங்ஸ்டோன், ஜேக்கப் பெத்தெல் ஆகியோர் காணப்படுகின்றனர்.

எதிர்பார்க்கப்படும் பதினொருவர்:
பில் ஸோல்ட், விராட் கோலி, ரஜாட் பட்டிடார், லியம் லிவிங்ஸ்டோன், ஜிதேஷ் ஷர்மா, ஜேக்கப் பெத்தெல், குருனால் பாண்டியா, புவ்னேஷ்வர் குமார், ரசிக் சலாம், ஜொஷ் ஹேசில்வூட், சுயஷ் ஷர்மா.

தாக்கம் செலுத்தும் வீரர்கள்: தேவ்டுட் படிக்கல், யஷ் தயால், றொமாரியோ ஷெப்பர்ட், நுவான் துஷார.

ஐ.பி.எல்:

## கடந்த முறை விட்டதைப் பிடிக்குமா சண்றைசர்ஸ்?

இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) கடந்த பருவகாலத்தில் இமாலய ஓட்ட எண்ணிக்கைகளைக் குவித்து எதிரணிகளுக்கு அச்சமூட்டிய சண்றைசர்ஸ் ஹைதரபாத், இறுதிப் போட்டியில் கொல்கத்தா நைட் றைடர்ஸிடம் விட்டதை இம்முறை பிடிக்கும் நோக்கில் இம்முறை களமிறங்குகின்றது.

கடந்த முறை போர்மியுலாவையே இம்முறையும் சண்றைசர்ஸ் பிரதிபலிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில், ஏற்கெனவே இருந்த அபிஷேக் ஷர்மா, ட்ரெவிஸ் ஹெட், ஹெய்ன்றிச் கிளாசென், நிதிஷ் குமார் ரெட்டியுடன் இஷன் கிஷனையும் இம்முறை கூட்டணி சேர்த்துள்ளது. இதற்குப் பின்னால் அபினவ்



மனோகர், சச்சின் பேபி, அனிகெட் வெர்மாவே இருக்கின்றமையே குறையாக இருக்கின்றது. ஏனெனில் ராகுல் ட்ரிபாதி, மாயங்க் அகர்வால், அன்மொல்பிறீட் சிங், அப்துல் சமட், ஏய்டன் மார்க்ரம், கிளென் பிலிப்ஸை கடந்த முறை குழாமிலிருந்து விடுவித்திருந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 21, மார்ச் 2025, இல.08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.